தின பூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 246 ஆனி 31
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, செவ்வாய், ஜூலை 15, 2025
▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**புதின் அழகாக பேசுகிறார்; ஆனால் குண்டுகளையும் வீசி விடுகிறார்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தாக்கு**
...2-ம் பக்கம்

**பயணத்தை தொடங்கிய டிராகன்: சுபான்ஷு சுக்லா உள்பட 4 பேர் இன்று பூமிக்கு திரும்புகின்றனர்**
...3-ம் பக்கம்

**நடத்தை விதியை மீறியதாக இந்திய வீரர் சிராஜுக்கு அபராதம் விதித்த ஐ.சி.சி.**
...6-ம் பக்கம்






● சென்னையில் நேற்று நடைபெற்ற முன்னாள் நீதியரசர் எம்.சத்தியநாராயணனின் மகன் அரவிந்த் சண்முகநாதன்-கிரிஸ்டீன் மரியா கென்காட் ஆகியோரது திருமண விழாவில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தினார்.

'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்'

# சிதம்பரத்தில் இன்று தொடங்கி வைக்கிறார் முதல்வர் ஸ்டாலின்

## தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் முகாம்கள் நடத்த ஏற்பாடு

சென்னை, ஜூலை 15-

**உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சிதம்பரத்தில் தொடங்கி வைக்கிறார். தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் இடங்களில் முகாம்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மீது 45 நாளில் தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**உரிய நேரத்தில்....**

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடர்பாக ஐ.ஏ.எஸ். அதிகாரி அமுதா சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் கூறியதாவது, அரசு திட்டங்களும் அதன் பயன்களும் மக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்பது முதல்வர் ஸ்டாலினின் நோக்கமாகும். அதற்காக 4 சிறப்பு அதிகாரிகள் நான்கு மூத்த அதிகாரிகளை நியமித்திருக்கிறார். உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நாளை ( இன்று ) சிதம்பரத்தில் தொடங்க இருக்கிறது.

**திட்ட முகாம்கள்...**

10 ஆயிரம் இடங்களில் நடைபெறும் இந்த திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைக்க இருக்கிறார். 3 ஆயிரத்து 738 நகர்ப்புற பகுதிகளிலும் 6 ஆயிரத்து 232 ஊரக பகுதிகளிலும் இந்த திட்ட முகாம் நடைபெறுகிறது. 10 ஆயிரம் பேருக்கு ஒரு முகாம் என்ற அளவில் நடைபெறும் இந்த திட்டம் குறித்த தகவல்கள் இணையதளம் மூலம் வழங்கப்படுகிறது.

**கோரிக்கை மனு...**

இதற்கான தகவல்களை வழங்குவதற்கான உங்களுடன் ஸ்டாலின் வெப்சைட்டையும் முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைக்கிறார், தொடங்க இருக்கும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பட்டா, பட்டாமாற்றம், மின்சார இணைப்பு முதியோர் மற்றும் விதவையர் உரிமை தொகை உள்ளிட்ட கோரிக்கை மனுக்களை வழங்கலாம். இந்த திட்டத்தில் துறை வாரியான அதிகாரிகள் இடம் பெற்று மக்களின் மனுக்களை பெறுவார்கள். பொதுமக்களின் மனுக்களில் அன்றன்றே தீர்க்ககூடியதாக இருப்பின் உடனே தீர்க்கப்படும்.

**தன்னார்வலர்கள்...**

இதற்கான விண்ணப்பங்களை வீடு வீடாக வழங்க 1 லட்சம் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் மனுக்கள் குறித்த தகவலை 1100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு அறியலாம் நீங்கள் அளித்த மனுக்கள் குறித்து 45 நாளில் தீர்வு காணப்படும். தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகைக்கான விண்ணப்பங்களை பெறுவதற்காக 1 கோடியே 16 லட்சம் பேர் விண்ணப்பங்களை அளித்திருக்கிறார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் மகளிர் உரிமைத்தொகைக்கான விண்ணப்பங்களும் பெறப்படும். தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

**உச்சவரம்பின் கீழ்...**

விண்ணப்பங்களோடு ஆதார் கார்டு, வங்கி அட்டை மற்றும் செல்போன் எண் மிக முக்கியமாகும். மகளிர் உரிமை தொகைக்கான விண்ணப்பம் பெறப்பட்டதும் வழங்கியவருக்கு எஸ்.எம்.எஸ். வந்து சேரும். விதவையர்களுக்கான உதவித்தொகையை ஏற்கனவே குடும்பத்தில் உள்ளவர் பெற்றிருந்தால் அந்த குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் வருமான உச்சவரம்பின் அடிப்படையில் கிடைக்கும். ரூ 2.5 லட்சம் வருமான உச்சவரம்பிற்குட்பட்ட அங்கன் வாடி ஊழியர்களுக்கும் கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்ல

# புதிய செய்தி தொடர்பாளர்களாக 4 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் நியமனம்

சென்னை, ஜூலை 15-

**தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக அரசு நியமித்துள்ளது. அரசின் திட்டங்கள் மற்றும் தகவல்களை வேகமாகவும், சரியான தகவல்களை உரிய நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்கவும் அரசு செய்தித் தொடர்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக அரசு நியமிக்கிறது.



புதிய செய்தி தொடர்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அமுதா ஐ.ஏ.எஸ்., ராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ்., தீரஜ் குமார் ஐ.ஏ.எஸ். (இடமிருந்து வலமாக)

முதல்வர் ஸ்டாலின், தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், கீழ்க்கண்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக நியமித்துள்ளார்.

1. டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ஐஏஎஸ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்சார வாரியம்.

2. ககன்தீப் சிங் பேடி, ஐஏஎஸ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

3. தீரஜ் குமார், ஐஏஎஸ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை.

4.பெ. அமுதா, ஐஏஎஸ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.

மேற்கண்ட அதிகாரிகள் எந்தெந்த துறை சம்மந்தமாக செய்திகள் வெளியிட வேண்டும் என முதல்வரின் ஆணைப்படி அவர்களுக்கு கீழ்க்காணுமாறு துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன:-

1. டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ஐஏஎஸ், எரிசக்தித் துறை · மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை · போக்குவரத்துத் துறை · கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை · வெளிநாடு வாழ் தமிழர் நலன் · பள்ளிக் கல்வித் துறை · உயர்கல்வித் துறை · கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை · மனிதவள மேலாண்மைத் துறை.

2. ககன்தீப் சிங் பேடி, ஐஏஎஸ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை · ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை · கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை · வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை · நீர்வளத் துறை · சுற்றுச் சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத் துறை · குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை · தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை · இயற்கை வளங்கள் துறை

3. தீரஜ் குமார். ஐஏஎஸ், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

4. பெ. அமுதா, ஐஏஎஸ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை · மாற்றுத் திறனாளிகள் நலத்துறை · தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை · ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை · பிற்படுத்தப்பட்டோர் மிகவும்

(கடைசி பக்கம் பார்க்க)

முருகப் பெருமானின் முதல் படை வீடான


# திருப்பரங்குன்றம் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலம்

## லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

மதுரை, ஜூலை 15-

**முருகப் பெருமானின் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று (ஜூலை 14) அதிகாலை 5.31 மணியளவில் கும்பங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்**

முருகப் பெருமானின் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் 14 ஆண்டுகளுக்குப் பின்பு கும்பாபிஷேகம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதனை முன்னிட்டு ரூ.2 கோடியே 44 லட்சம் மதிப்பில் ராஜகோபுரத்தில் 7 தங்க கலசம், அம்பாள் சன்னதியில் 1 தங்கக் கலசம், கணபதி கோவில் 1 கலசம் உள்பட 9 கலசங்கள் உள்பட 20 திருப்பணிகள் நடந்துள்ளன. உபயதாரர் மூலம் ரூ.70 லட்சத்தில் ராஜகோபுர திருப்பணிகள் நடந்துள்ளன.



கும்பாபிஷேக விழாவில் பங்கேற்க நேற்று முன்தினம் இரவு (ஜூலை 13) 10 மணியளவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலிருந்து மீனாட்சி, சுந்தரேசுவரர் பரிவார மூர்த்திகளுடன் புறப்பட்டனர்.

முக்கிய நிகழ்ச்சியான கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஐந்தாம் நாளான நேற்று (ஜூலை 14) அதிகாலை 3.45 மணிக்கு எட்டாம் கால யாக பூஜை நடைபெற்றது. அதிகாலை 5 மணிக்கு கலசங்கள் புறப்பாடு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து காலை 5.31 மணியளவில் சுப்பிரமணிய சுவாமி கோவில் ராஜகோபுரம், பரிவார மூர்த்திகள், கோவர்த்தனாம்பிகை, வல்லப கணபதி ஆகிய விமானங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ராஜகோபுரத்தில் உள்ள 7 தங்க கலசம், அம்பாள் சன்னதியில் 1 கலசம், கணபதி கோவில் 1 கலசம் உள்பட 9 கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்துக்குப் பின் 10 ட்ரோன்கள் மூலம் புனித நீரை பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது.

இவ்விழாவில் அமைச்சர் சேகர்பாபு பச்சைக்கொடி அசைக்க கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.மூர்த்தி, திருப்பரங்குன்றம் தொகுதி எம்எல்ஏ ராஜன் செல்லப்பா, ஆட்சியர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கும்பாபிஷேக விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். மாநகர காவல் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமையில் துணை ஆணையர்கள் அனிதா, இனிகோ திவ்யன், வனிதா (போக்குவரத்து) ஆகியோர் மேற்பார்வையில் 3 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் ப.சத்யபிரியா பாலாஜி தலைமையில் கோவில் துணை ஆணையர் சூரியநாராயணன், அறங்காவலர்கள் முனைவர் வ.சண்முகசுந்தரம், மணிச்செல்வன், பொம்மதேவன், ராமையா மற்றும் கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# சரோஜா தேவி மறைவு: பிரதமர் மோடி இரங்கல்

புதுடெல்லி, ஜூலை 15-



**பழம்பெரும் நடிகை சரோஜா தேவி மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து தனது எக்ஸ் தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது,

"திரைத் துறை ஆளுமை பி. சரோஜா தேவியின் மறைவு வருத்தம் அளிக்கிறது. இந்திய சினிமா மற்றும் கலாசாரத்தின் முன்மாதிரியாக என்றும் அவர் நினைவுகூரப்படுவார். அவரின் மாறுபட்ட நடிப்பு தலைமுறைகளைத் தாண்டி அழியாத அடையாளத்தை ஏற்படுத்தி வருகிறது. பல்வேறு மொழிகளில் பல்வேறு கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அவரின் பணிகள் இருந்தது, இயல்பிலேயே அவரின் பன்முகத்தன்மையை காட்டுகிறது. அவரின் குடும்பத்தாருக்கும் ரசிகர்களுக்கும் எனது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். ஓம் சாந்தி" எனப் பதிவிட்டுள்ளார்.

கோவா, அரியானா உள்ளிட்ட

# 3 மாநிலங்களுக்கு புதிய கவர்னர்கள் நியமனம்

புதுடெல்லி, ஜூலை 15-

கோவா, அரியானா மாநிலங்கள் மற்றும் லடாக் யூனியன் பிரதேசத்திற்கு கவர்னர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதன்படி, கோவா மாநில கவர்னராக பசுபதி அசோக் கஜபதி ராஜு நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் மூத்த அரசியல்வாதி ஆவார். விமான போக்குவரத்து துறையின் முன்னாள் மத்திய மந்திரியாகவும் பதவி வகித்தவர்.

இதேபோன்று, அரியானா மாநில கவர்னராக ஆஷிம் குமார் கோஷ் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார். அவர் உயர் கல்வி துறையில் நிர்வாக துறையில் அனுபவம் வாய்ந்தவர் ஆவார்.

லடாக் யூனியன் பிரதேச கவர்னராக கவீந்தர் குப்தா நியமிக்கப்பட்டு உள்ளார். ஜம்முவை சேர்ந்த மூத்த பா.ஜ.க. உறுப்பினரான அவர், ஜம்மு மற்றும் காஷ்மீரின் சட்டசபைக்கான சபாநாயகராகவும் பதவி வகித்திருக்கிறார்.

லடாக் துணை நிலை கவர்னராக பதவி வகித்த ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரலான, பி.டி. மிஷ்ரா ராஜினாமா செய்த நிலையில், அதனை ஜனாதிபதி திரௌபதி முர்மு ஏற்று கொண்டார். இதனை ஜனாதிபதி மாளிகை உறுதி செய்து அறிவித்துள்ளது.

# 40 காவல் அதிகாரிகள் பணியிட மாற்றம்: டி.ஜி.பி. சங்கர் ஜிவால்

சென்னை, ஜூலை 15-

**டி.எஸ்.பி., உதவி ஆணையர் பொறுப்பிலுள்ள 40 காவல் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து டி.ஜி.பி. சங்கர் ஜிவால் நடவடிக்கை எடுத்துள்ளார்.**

நிர்வாக காரணங்களுக்காக காவல்துறையில் அவ்வப்போது பணியிட மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அந்த வகையில் , காவல் அதிகாரிகள் சிலரை பணியிட மாற்றம் செய்து டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாநகரக் காவல்துறையின் எம்.கே.பி. நகர் சரக காவல்துறை உதவி ஆணையராக உள்ள மணிவண்ணன் மன்னார்குடி காவல் துணைக் கண்காணிப்பாளராக மாற்றப்பட்டுள்ளார். அதேபோல,மத்திய குற்றப்பிரிவு உதவி ஆணையராகவுள்ள காவ்யா, மணப்பாறை காவல் துணைக் கண்காணிப்பாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், கோவை சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி. சரவணன், சேலம் காவல் உதவி ஆணையர் செல்வம், தீவிரவாத தடுப்புப் பிரிவு டிஎஸ்பி பண்டாரசாமி, சென்னை திருமங்கலம் உதவி ஆணையர் பிரம்மானந்தன் உள்ளிட்டோரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -247.01 | -67.55 | 1 சவரன் ₹72,160 | 1 கிலோ ₹120,000 | ₹86.02 | ₹102.63 |
| பாயின்ட் 82,253.46 | பாயின்ட் 25,082.30 | 1 கிராம் ₹9,020 | 1 கிராம் ₹120.00 | | டீசல் ₹94.24 |

# புதின் அழகாக பேசுகிறார்; ஆனால் குண்டுகளையும் வீசி விடுகிறார்

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தாக்கு

**வாஷிங்டன், ஜூலை 15-**

புதின் அழகாக பேசுகிறார் . ஆனால் அனைவர் மீதும் குண்டுகளை போடுகிறார் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



ரஷியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது.இந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. ஆனால், இதில் இன்னும் உடன்பாடு எட்டப்படாததால், உக்ரைன் மீது ரஷியா குண்டு மழை பொழிந்து வருகிறது. பதிலுக்கு உக்ரைனும் தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஷியா- உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் ட்ரம்ப், புதினை கடுமையாக விமர்சித்து வருகிறார். வாஷிங்டன்னில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப் கூறியதாவது: புதின் அழகாக பேசுகிறார் . ஆனால் அனைவர் மீதும் குண்டுகளை போடுகிறார். உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்ப உள்ளது.”என்றார். எனினும், எத்தனை ஆயுதங்கள் வழங்கப்படும் என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. அதேபோல, ரஷியா மீது மேலும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்பதையும் ட்ரம்ப் சூசகமாக குறிப்பிட்டார்.

# காசாவில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் உயிரிழப்பு

**காசா முனை, ஜூலை 15-**

காசாவில் நடந்த ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் பலியாகினர். இதற்கு தொழில்நுட்ப தவறு என இஸ்ரேல் விளக்கம் அளித்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து அவர்களை மீட்பதற்காக, காசாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. இந்நிலையில், 21 மாதங்களாக நடந்து வரும் போரில், காசா பகுதியில் 58 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர்.

இந்தநிலையில் காசா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் பொறுப்பை, காசா மனிதாபிமான அறக்கட்டளையிடம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா வழங்கியுள்ளன. இங்கு நாளொன்றுக்கு ஐந்து சரக்கு லாரிகளில் நிவாரண பொருட்கள் வருகின்றன. அவற்றை பெறுவதற்கு தினமும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. இந்தநிலையில், நுசைரத் அகதிகள் முகாமில் தண்ணீர் விநியோக இடத்தில் இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 34 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் சந்தை மற்றும் தண்ணீர் விநியோக இடத்தில் இருந்தவர்கள் என கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொழில்நுட்பக் கோளாறால் ஏற்பட்டதாகக் கூறிய இஸ்ரேல் ராணுவம், தற்போது இது குறித்து விசாரித்து வருவதாக விளக்கம் அளித்துள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின், காவல் உதவி ஆய்வாளர் முரளிதரன் (ஓய்வு) அவர்களின் மகன் சந்தோஷ்குமார், சென்னை பெரவள்ளூரில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சென்னை அப்போலா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதையொட்டி, மருத்துவமனைக்கு நேற்றி நேரில் சென்று உடல் நலம் விசாரித்து, மருத்துவரிடம் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

## நடிகை சரோஜாதேவி மறைவு:

# அரசியல் கட்சித்தலைவர்கள் இரங்கல்

**சென்னை, ஜூலை 15-**

நடிகை சரோஜாதேவி மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.;

தமிழ் திரைப்பட உலகில் 1960 களில் முன்னணி நடிகையாக வலம் வந்த சரோஜா தேவி வயது முதிர்வு காரணமாக பெங்களூருவில் நேற்று காலமானார். அவருக்கு வயது 87. சரோஜா தேவியின் மறைவிற்கு அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என பன்மொழிகளில் 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் தனது தனித்துவமிக்க நடிப்பாற்றலால் ரசிகர்களைக் கவர்ந்தவர் சரோஜா தேவி. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவி இணைந்து நடித்த திரைப்படங்கள் யாவும் காலத்தால் அழியாப் புகழ் பெற்றவை. புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் பேரன்பைப் பெற்ற சரோஜா தேவியை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கும், திரைத் துறையைச் சார்ந்தோருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், தமிழ்த் திரையுலகில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஏராளமான படங்களில் நடித்த சரோஜா தேவி கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் அனைத்துக் குடும்பங்களுக்கு நன்கு அறிமுகமானவர். மத்திய அரசின் பத்மபூஷன் மற்றும் தமிழக அரசு, ஆந்திர அரசு, கர்நாடக அரசால் வழங்கப்படும் ஏராளமான விருதுகளைப் பெற்றவர். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

பிரேமலதா விஜயகாந்த்: கேப்டனுடன் இணைந்து பொன்மனச் செல்வன் திரைப்படத்தில் அம்மாவாக நடித்தவர். அனைவரிடமும் அன்போடும், பாசத்தோடும் பழகக் கூடியவர்.

கலை உலகில் அரசியாக வாழ்ந்தவர். அவரது இழப்பு திரை உலகிற்கே ஈடு இணையே இல்லாத இழப்பு, அவர் மறைந்தாலும் காலம் இருக்கும் வரை அவரின் புகழ் நிலைத்திருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி

# பி.ஆர்.கவாய் மருத்துவமனையில் அனுமதி

**புதுடெல்லி, ஜூலை 15-**

சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்திய சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக பி.ஆர். கவாய் பதவி வகித்து வருகிறார். சமீபத்தில், தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நள்சார் சட்ட பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்து கொண்டார். அப்போது அவர், நம்முடைய நாடும், சட்ட முறைகளும் தனித்துவ சவால்களை எதிர்கொண்டுள்ளன. வழக்கு விசாரணைகளில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன என வேதனை வெளியிட்டார். பல ஆண்டுகளாக விசாரணை கைதிகளாகவே சிறையில் காலம் கழித்த பின்னர், அவர்கள் நிரபராதி என தெரிய வரும் பல வழக்குகளையும் நாம் பார்க்கிறோம் என்றும் அவர் வேதனையுடன் பேசினார்.

நம்முடைய சட்ட நடைமுறைகளில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு அது சீர்கெட்டு காணப்படுகிறது என வேதனை தெரிவித்த அவர், எனினும், இந்த சவால்களை எங்களுடைய சக குடிமகன்கள் தீர்ப்பார்கள் என நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். அவருடைய இந்த பேச்சுக்கு மராட்டிய முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் ஆதரவு தெரிவித்து உள்ளார். இதுபற்றி செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய் கூறியது முற்றிலும் சரி. நம்முடைய நீதி நடைமுறை விரைவாக செயல்பட வேண்டிய தேவை உள்ளது என்றார்.

இந்நிலையில், அவருக்கு கடுமையான தொற்று பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, டெல்லியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். இதில், சிகிச்சைக்கு அவர் நல்ல முறையில் ஒத்துழைப்பு கொடுக்கிறார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், ஓரிரு நாட்களில் அவர் பணிக்கு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இளையராஜா தொடர்ந்த வழக்கில் நடிகை வனிதா பதிலளிக்க உத்தரவு

**சென்னை, ஜூலை 15-**

சென்னை உயர் நீதிமன்றத்தில் இசையமைப்பாளர் இளையராஜா தாக்கல் செய்த மனுவில், “நடிகை வனிதா விஜயகுமார், நடன இயக்குநர் ராபர்ட் உள்ளிட்டோர் நடித்துள்ள திரைப்படம் ‘மிசஸ் அண்ட் மிஸ்டர்’. இந்தப் படத்தில் எனது இசையில் வெளிவந்த ‘மைக்கேல் மதன காமராஜன் படத்தில் இடம் பெற்ற. ‘சிவராத்திரி’ பாடல் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது காப்புரிமை மீறிய செயலாகும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு செந்தில்குமார் ராமமூர்த்தியிடம் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது இளையராஜா தரப்பில், மிசஸ் அண்ட் மிஸ்டர் படத்தில் அனுமதியின்றி தனது பாடலை பயன்படுத்தியதோடு, அந்தப் படத்தின் விளம்பரங்களில் தனது பெயரும் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அதற்கும் தடை விதிக்க வேண்டும் என வாதிடப்பட்டது.

அப்போது வனிதா விஜயகுமார் தரப்பில், சம்பந்தப்பட்ட பாடலை, எக்கோ நிறுவனத்தின் அனுமதியைப் பெற்று பயன்படுத்தியதாகவும், மனுதாரருக்கும் எக்கோ நிறுவனத்துக்கும் இடையேயான காப்புரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இளையராஜா தொடர்ந்த வழக்கில் வனிதா விஜயகுமார் ஒரு வாரத்தில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

# மதுரையில் செப். 4-ம் தேதி மாநாடு: ஓ.பி.எஸ். தகவல்

**சென்னை, ஜூலை 15-**

மதுரையில் வரும் செப்., 4ம் தேதி நடத்தப்படும் மாநாட்டில், எதிர்காலத்தில் நாம் என்ன முடிவுகளை எடுக்கப்போகிறோம் என்பது குறித்த அறிவிப்பை வெளியிட இருப்பதாக ஓ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

சென்னையில் தனது ஆதரவாளர்களுடன் ஓ.பி.எஸ்., ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது: தர்மயுத்தம், சட்டப்போராட்டத்தை எதற்காக நாம் கையில் எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதில் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காட்டிய வழியில் தான் நாம் உயிர்மூச்சு இருக்கும் வரையில் பயணிப்போம்.

மதுரையில் செப்டம்பர் 4-ம் தேதி மாநாடு நடத்தப்படும். அதில், எதிர்காலத்தில் நாம் என்ன முடிவுகளை எடுக்கப்போகிறோம் என்ற அறிவிப்பை வெளியிட இருக்கிறோம். 2 ஆண்டு காலம் எவ்வளவோ கடினமான சூழ்நிலைகள் வந்தன. இருந்தாலும், எங்களின் சக்தியையும், திறமையையும் வெளிக்காட்டவே, ராமநாதபுரம் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்டோம். அந்தத் தேர்தலின் நமக்கு விழுந்த ஓட்டுக்களின் மூலம், மக்களின் ஆதரவு நமக்கு தான் இருக்கிறது என்பது வெளிப்பட்டது, இவ்வாறு அவர் கூறினார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு

**மேட்டூர், ஜூலை 15-**

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்பட்ட உபரி நீர் வரத்து காரணமாக கடந்த 5ஆம் தேதி நடப்பு ஆண்டி 2-வது முறையாக மேட்டூர் அணை நிரம்பியது.

தற்போது மழை தணிந்து வருவதால் கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் உபரி நீரின் அளவும் குறைக்கப்பட்டது. அதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறை ந்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 20,500 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர் வரத்து நேற்று காலை வினாடிக்கு 19,760 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு நீர்மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 20,000 கனஅடி நீரும் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்குமேல் மட்ட மதகுகள் வழியாக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 119.85 அடியாகவும் நீர் இருப்பு 93. 23 டி.எம்.சி.யாக உள்ளது.

## அமெரிக்காவில்

# மத வழிபாட்டு தலத்தில் துப்பாக்கிச்சூடு-2 பேர் பலி

**வாஷிங்டன், ஜூலை 15-**

அமெரிக்காவில் மத வழிபாட்டு தலத்தில் துப்பாக்கி சூடு நடந்தது. இதில் 2 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் கெண்டகி மாகாணம் லெக்சிங்டன் நகரில் கிறிஸ்தவ மதவழிபாட்டு தலமான தேவாலயம் உள்ளது. இந்த தேவாலயத்தில் (அந்நாட்டு நேரப்படி ஞாயிற்றுகிழமை) வழக்கமான பிரார்த்தனை நடைபெற்றது. பிரார்த்தனையில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். அப்போது, தேவாலயத்திற்குள் துப்பாக்கியுடன் நுழைந்த நபர் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினார். இந்த துப்பாக்கி சூட்டில் 2 பெண்கள் உயிரிழந்தனர்.


மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், துப்பாக்கி சூடு நடத்திய நபரை சுட்டுக்கொன்றனர். மேலும் படுகாயமடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உ.பி.யில் கனமழை; 14 பேர் உயிரிழப்பு

**லக்னோ, ஜூலை 15-**

உத்தரபிரதேச மாநிலத்தில் சனிக்கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது. அம்மாநிலத்தின் ஜன்பூர், ரேபரெலி, சந்துலி, குஷிநகர், கான்பூர், சித்ரகொட், பண்டா, பிரதாப்கர் உள்பட பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை வரை கனமழை பெய்தது. கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட சம்பவங்களும் அரங்கேறியுள்ளது. இந்நிலையில், அம்மாநிலத்தில் கடந்த 24 மணிநேரத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், மின்னல், பாம்புகடி உள்ளிட்ட சம்பவங்களால் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

**15-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா வகையிலும் ஏற்றந்தரும் நாள். தனலாபம் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி கிட்டும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அனைத்தும் நல்லதாக நடக்கும். மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடும்.

**ரிஷபம்:-** இன்று, உங்கள் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** சிலருக்கு திடீர் பயணங்கள் ஏற்படும், தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். சுகமும் சந்தோஷமும் அதிகரிக்கும்.

**கடகம்:-** சுமாரான நாள், அடக்கி வாசிக்க வேண்டிய நாள். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது. பணிவோடு இருக்கப் பயன் தரும் நாள்.

**சிம்மம்:-** வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நிலை ஏற்படும். பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். தொழில் புரிபவர்களுக்கு இன்று பேச்சே மூலதனமாகும்.

**கன்னி:-** எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் பெருகும். நல்ல நேரத்தில் நண்பர்கள் கை கொடுப்பர். புதுப் பெண்கள் சிநேகத்தால் துள்ளாத மனமும் துள்ளும். தனவரவு கூடும். பயண சுகம் உண்டு.

**துலாம்:-** இன்று, எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். . குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. பயணத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகமும் தூக்கமும் குறையும். வியாபாரத்தில் விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**தனுசு:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள். விருப்பங்கள் நிறைவேறும்.

**மகரம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடலாம்.

**கும்பம்:-** பெரியோர் நேசம், வாகன யோகம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**மீனம்:-** வீண் வம்பை விலைக்கு வாங்காதீர்கள். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். மனம் போன போக்கில் அலைய நேரும்.

# புதுச்சேரியில் புதிய அமைச்சர், நியமன எம்.எல்.ஏ.-க்கள் பதவியேற்பு

**புதுச்சேரி, ஜூலை 15-**



புதுச்சேரி புதிய அமைச்சராக ஜான்குமார், நியமன எம்.எல்.ஏ.க்களாக மூவர் நேற்று (திங்கள்கிழமை) பதவியேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வை தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் புறக்கணித்தனர்.

புதுவையில் முதல்வர் ரங்கசாமி தலைமையில் என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. என்.ஆர்.காங்கிரஸ் சார்பில் முதல்வர் உட்பட 4 அமைச்சர்களும், பா.ஜ.க. தரப்பில் தேர்வானோரில் பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்களாக சாய் சரவண ஆகியோர் இருந்தனர். பதவி கிடைக்காத பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் வாரியத் தலைவர், அமைச்சர் பதவி கோரி வந்தனர். மேலும், அவர்கள் அரசுக்கும், கட்சி மேலிடத்துக்கும் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் ஆட்சி நிறைவு பெறவுள்ள சூழலில் சுழற்சி அடிப்படையில் மற்றொருவருக்கு அமைச்சர் பதவி தர பா.ஜ.க. தலைமை முடிவு செய்தது. அதேபோல மத்திய அரசால் நேரடியாக நியமிக்கப்பட்ட மாற்ற முடிவு செய்தது. இதற்காக கடந்த மாதம் 27-ம் தேதி பா.ஜ.க. அமைச்சர் சாய் சரவணக்குமார் தனது பதவியை ராஜினாமா செய்தார். அதே நாளில் நியமன எம்.எல்.ஏ.க்களாக இருந்த வெங்கடேசன், ராமலிங்கம், அசோக் பாபு ஆகியோரும் தங்கள் ராஜினாமா செய்தனர்.

இதையடுத்து பா.ஜ.க. தரப்பில் காமராஜர் நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்.எல்.ஏ. ஜான்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டது. அதேபோல நியமன எம்.எல்.ஏ.க்களாக தீப்பாய்ந்தான், காரைக்காலை சேர்ந்த ராஜசேகர், செல்வம் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டனர்.

இதையடுத்து நேற்று மதியம் புதுவை சட்டப் பேரவையில் உள்ள பேரவைத்தலைவர் அறையில் நியமன எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு விழா நடந்தது. பேரவைத் தலைவர் செல்வம், எம்.எல்.ஏ.க்களாக தீப்பாய்ந்தான், ராஜசேகர், செல்வம் ஆகியோருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து, அவர்களு க்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசியல் கட்சியினர் நியமன எம்.எல்.ஏ.க்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## படப்பிடிப்பில் ஸ்டண்ட் மாஸ்டர் பலி:

# இயக்குனர் பா.ரஞ்சித் மீது வழக்கு பதிவு

**நாகை, ஜூலை 15-**

படப்பிடிப்பு தளத்தில் ஸ்டன்ட் காட்சியின் போது ஸ்டண்ட் மாஸ்டர் ஒருவர் உயிரிழந்த விவகாரத்தில் இயக்குனர் பா.ரஞ்சித் உள்ளிட்ட நான்கு பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அட்டக்கத்தி, மெட்ராஸ், கபாலி, காலா, சார்பட்ட பரம்பரை, தங்கலான்’ உள்ளிட்ட படங்களை இயக்கியவர் பா. ரஞ்சித். தற்போது நடிகர் ஆர்யாவை வைத்து ‘வேட்டுவம்’ என்ற படத்தை இயக்கி, தயாரித்து வருகிறார். ‘அட்டகத்தி’ தினேஷ், சோபிதா துலிபாலா, லிஸி ஆண்டனி , கலையரசன், ஷபீர் உள்ளிட்டோர் நடிக்கிறார்கள். காரைக்குடியில் இதன் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்த நிலையில் விழுந்தமாவடி என்ற ஊரில் சண்டை காட்சிக்கான படப்பிடிப்பு நேற்று முன்தினம் நடந்தது.

அப்போது, காஞ்சிபுரம் மாவட்டம், பூங்கண்டம் பகுதியை சேர்ந்த சண்டை பயிற்சியாளர் மோகன்ராஜ், 52, என்பவர் காரில் தாவி செல்லும் காட்சி படம் பிடிக்கப்பட்டது. தவறி விழுந்து படுகாயமடைந்தார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு நாகை, அரசு மருத்துவக் கல்லூரி ம ரு த் து வ ம னை க் கு அழைத்து சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுபற்றி கீழையூர் போலீசார் விசாரிக்கின்றனர். இந்நிலையில் பா.ரஞ்சித் உள்ளிட்ட 4 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். கவனக்குறைவு அல்லது அலட்சியத்தால் படப்பிடிப்பு நடத்தி ஒரு உயிர் போக காரணமாக இருந்ததாக கூறி 4 பேர் மீது வழக்குப் பதிவாகி உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நடிகை சரோஜாதேவி மறைவு: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, ஜூலை 15-**

தென்னிந்தியத் திரையுலகின் பழம்பெரும் நடிகையான சரோஜா தேவி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

தென்னிந்தியத் திரையுலகின் பழம்பெரும் நடிகையான சரோஜா தேவி மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெமினி கணேசன் முதலிய உச்ச நட்சத்திரங்களுடன் இணைந்து இரசிகர்களால் இன்றளவும் கொண்டாடப்படும் பல மறக்க முடியாத வெற்றிப் படங்களை அளித்தவர் சரோஜாதேவி.

தமது அழகிய முகபாவங்களாலும் நளினமான நடிப்பாலும் 'அபிநய சரஸ்வதி' எனப் புகழப்பட்டவர். நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும், கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா, உன்னை ஒன்று கேட்பேன், லவ் பேர்ட்ஸ், தொட்டால் பூ மலரும், ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் என எத்தனையோ இனிய பாடல்களுக்குத் தமது நடிப்பால் பொலிவூட்டி தமிழ் மக்களின் நெஞ்சினில் நீங்கா இடம் பிடித்திருப்பவர் சரோஜாதேவி அம்மையார்.

சுமார் 200 திரைப்படங்களில் நடித்து, இந்தியத் திரையுலகிற்கு ஆற்றிய பங்களிப்புகளுக்காக பத்மஸ்ரீ, பத்மபூஷன், இந்திய அரசின் வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது என எண்ணற்ற பெருமைகளைப் பெற்றவர். எப்போதும் இனிய முகத்துடனும், கனிவான பேச்சுடனும் காணப்படும் சரோஜாதேவியின் மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாதது. அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும், அவரது ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பயணத்தை தொடங்கியது டிராகன்:

# சுபான்ஷு சுக்லா உள்பட 4 பேர் இன்று பூமிக்கு திரும்புகின்றனர்

**நியூயார்க், ஜூலை 15-**

சுபான்ஷு சுக்லா உள்பட 4 பேருடன் பூமியை நோக்கி தனது பயணத்தை டிராகன் விண்கலம் தொடங்கியது. இன்று மாலை அவர்கள் பூமிக்கு திரும்புகின்றனர் .

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கடந்த ஜூன் 25-ந் தேதி இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா, பெக்கி விட்சன், திபோர் கபு மற்றும் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி-விஸ்னீவ்ஸ்கி புறப்பட்டு சென்றனர். அவர்கள் விண்வெளியில் பயிர்கள் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் இவர்களுடைய 14 நாட்கள் ஆராய்ச்சி பணி நிறைவடைந்து, நேற்று பூமிக்கு திரும்பும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக, சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலத்தின் திறக்கப்பட்டன. இதன்பின்னர், சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 பேரும் விண்கலத்திற்குள் நுழைந்தனர். தொடர்ந்து மாலை 4.15 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விண்கலம் தனியாக பிரிக்கப்பட்டு, மாலை 4.35 மணிக்கு பூமியை நோக்கிய விண்கலத்தின் பயணம் தொடங்கியது.. சுமார் 48 மணி நேர பயணத்திற்கு பிறகு நேற்று பகல் சுமார் 3 மணி அளவில் பூமியை வந்தடையும்.

விண்கலம், வடஅமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் பசிபிக் பெருங்கடலை ஒட்டி உள்ள கலிபோர்னியாவின் நீண்ட கடற்கரையில் பாதுகாப்பாக தரையிறக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அமெரிக்க கடற்படையும் தயார் நிலையில் உள்ளது.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி சட்டமன்றத்தொகுதி வாரியாக தொடர் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். 6-ம் நாளான நேற்று சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள வரசித்தி விநாயகர் கோவிலில் அவர் சுவாமி தரிசனம் செய்தார்.

# அமர்நாத்தில் பனி லிங்கத்தை 2 லட்சம் பக்தர்கள் தரிசித்தனர்

**ஸ்ரீநகர், ஜூலை 15-**

அமர்நாத் யாத்திரை தொடங்கியதில் இருந்து இதுவரை 2 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ளது அமர்நாத் குகைக் கோவில். இந்துக்களின் புனித தலங்களில் ஒன்றான இக்கோவில் பஹல்காமில் இருந்து சுமார் 48 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3,888 மீட்டர் உயரத்தில் இந்த குகைக் கோவில் அமைந்துள்ளது.

அமர்நாத் குகைக் கோவிலில் இயற்கையாக தோன்றும் பனிலிங்கத்தை தரிசிக்க வருடத்தின் குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே (ஜூலை- ஆகஸ்ட் மாதங்களில்) பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இந்த பனிலிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் யாத்திரையாக சென்று வருகின்றனர்.

அதன்படி இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை கடந்த 3-ந் தேதி தொடங்கியது. தொடர்ந்து ஆகஸ்ட் 9-ந்தேதி வரை அமர்நாத் யாத்திரை நடைபெற உள்ளது. அமர்நாத் யாத்திரை தொடங்கியதில் இருந்து இதுவரை 2 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

இந்தநிலையில், சிஆர்பிஎப் மற்றும் காவல்துறையினரின் துணையுடன், 4,691 ஆண்கள், 1,248 பெண்கள் மற்றும் 17 குழந்தைகள் உள்பட 6,143 பக்தர்களைக் கொண்ட 13வது குழு, பகவதி நகர் அடிப்படை முகாமில் இருந்து நேற்றுஅதிகாலை 3:30 மணி முதல் அதிகாலை 4:00 மணி வரை 235 வாகனங்களில் புறப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுவரை 4 லட்சத்திற்கும் அதிகமானோர் யாத்திரைக்காக ஆன்லைனில் பதிவு செய்துள்ளனர்.

# பழம்பெரும் நடிகை சரோஜாதேவி உடல்நலக்குறைவால் காலமானார்

**பெங்களூரு, ஜூலை 15-**

பழம்பெரும் நடிகை சரோஜா தேவி உடல்நலக்குறைவால் நேற்று (ஜூலை 14) காலையில் பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 87.

மூச்சுத்திணறல் காரணமாக பெங்களூரு கொலம்பியா ஏசியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சரோஜா தேவி இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவுக்கு ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



சரோஜாதேவி கன்னடம், தமிழ், தெலுங்கு மொழித் திரைப்படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வந்தவர். இவர் ஐம்பதாண்டு காலமாக திரைப்படத் துறையில் உலாவந்து, 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். ரசிகர்களால் "கன்னடத்துப் பைங்கிளி", "அபிநய சரசுவதி" போன்ற அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார். இவர் பல திரைப்பட விருதுகளையும், இந்திய அரசின் பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகளையும் வென்றுள்ளார். அதேபோல, வாழ்நாள் சாதனையாளர்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

சரோஜாதேவியின் தந்தை பைரவப்பா காவல் அதிகாரி. தாய் ருத்ரம்மா குடும்பத் தலைவி. இவர்களுக்கு நான்காவது மகளாகப் பிறந்த சரோஜாதேவி, ஹொன்னப்ப பாகவதர் கவி காளிதாஸாக நடித்து, தயாரித்த 'மகாகவி காளிதாஸா' என்ற கன்னடப் படத்தில் 1955-ம் ஆண்டு அறிமுகமானார் சரோஜாதேவி. படம் மிகப் பெரிய வெற்றி. அதற்குத் தேசிய விருதும் கிடைத்தது. தமிழில் உடனடியாக நடிக்க முடியாதபடி கன்னடப் படங்கள் அவருக்குக் குவிந்தன. 'இல்லறமே நல்லறம்' என்ற படத்தில் சின்ன வேடத்தில் தமிழில் அறிமுகமானார் சரோஜாதேவி. அதன் பின்னர் 2வது கதாநாயகி வேடங்கள் கிடைக்கத் தொடங்கின.


அதே ஆண்டில் எம்.ஜி.ஆர். சொந்தப்பட நிறுவனம் தொடங்கி இயக்கித் தயாரித்து நடித்த 'நாடோடி மன்னன்' படத்தில் 'ரத்னா'வாக வந்து அலங்கரித்த சரோஜாதேவி, தமிழ் ரசிகர்கள் மனதிலும் ஊடுருவினார். எம்.ஜி.ஆருடன் நாடோடி மன்னன் தொடங்கித் திருடாதே, தாய் சொல்லைத் தட்டாதே, படகோட்டி, எங்க வீட்டுப் பிள்ளை, பெற்றால்தான் பிள்ளையா, அன்பே வா உட்பட அவர் நடித்த அத்தனை படங்களும் வெற்றி பெற்றன. சிவாஜி கணேசனுடன் பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, பார்த்தால் பசி தீரும் என்று தொடங்கி 'புதிய பறவை'யாகக் காதலித்து அவரைக் கைது செய்ய வரும் ரகசிய ஏஜெண்டாகப் பிரமாதப் படுத்தினார். சரோஜா தேவி, எம்ஜிஆருடன் 26 படங்களிலும, சிவாஜி கணேசனுடன் 22 படங்களிலும் ஜோடியாக நடித்துள்ளார்.

# இந்தியா - சீனா இடையேயான கருத்துப் பரிமாற்றம் முக்கியம்

### மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து

**பெய்ஜிங், ஜூலை 15-**

இந்தியா - சீனா உறவை தொடர்ந்து இயல்புநிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையேயான கருத்துப் பரிமாற்றம் மிகவும் முக்கியம் என்றும் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.



ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(எஸ்சிஓ) தற்போதைய தலைவராக சீனா உள்ள நிலையில், அந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் இன்று (ஜூலை 15) நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக ஜெய்சங்கர் சீனா சென்றுள்ளார். கடந்த 2020-ம் ஆண்டு லடாக் எல்லையில் ஏற்பட்ட ராணுவ மோதலுக்குப் பிறகு முதல்முறையாக அவர் சீனா சென்றுள்ளார்.

சீன துணை அதிபர் ஹான் ஜெங்கை சந்தித்த ஜெய்சங்கர், இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, 6 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கைலாஷ் மானசரோவர் யாத்திரை தொடங்கி இருப்பது இந்தியாவில் பரவலாகப் பாராட்டப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச நிலைமை மிகவும் சிக்கலானதாக உள்ள நிலையில், அண்டை நாடுகளாகவும் பெரிய பொருளாதாரங்களாகவும் உள்ள இந்தியாவும் சீனாவும் வெளிப்படைத் தன்மையுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது மிகவும் முக்கியம் என ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இன்று நடைபெற உள்ள எஸ்சிஓ வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில், எஸ்சிஓ அமைப்பின் உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பெலாரஸ் ஆகிய 10 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்க இருக்கிறார்கள்.

# கேரளாவில் நிபா வைரஸுக்கு 2 பேர் பலி: தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

**மலப்புரம், ஜூலை 15-**

கேரளாவில் நிபா வைரஸுக்கு 2-வது நபர் பலியாகியுள்ளதை தொடர்ந்து, மாநில சுகாதாரத்துறை நிபா பரவல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

கேரளாவில் ஆண்டுதோறும் சீசன் போல் நிபா வைரஸ் பரவல் இருந்து வருகிறது. குறிப்பாக கோழிக்கோடு, மலப்புரம் உள்ளிட்ட இடங்களில் தொடர்ச்சியாக பாதிப்பு இருந்து வருகிறது. இதில் உயிரிழப்பும் ஏற்பட்டு வருகிறது.

இந்தசூழ்நிலையில் பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு அருகே குமரமபுத்தூர் பகுதியை சேர்ந்தவர் 58 வயது நபர். இவர், கடந்த சில நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். உடல்நிலை மிகவும் மோசமானதால் அவர் மஞ்சேரியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் திரவ மாதிரிகளை சேகரித்து பரிசோதித்ததில் அவர் நிபா வைரஸ் பாதித்து இறந்தது தெரியவந்தது.

இதனை உறுதி செய்வதற்காக அவரது உடல் திரவ மாதிரிகள் புனேவில் உள்ள வைராலஜி ஆய்வகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மாநில சுகாதாரத்துறை நிபா பரவல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக மாவட்ட சுகாதாரத்துறையால் நிபா வைரஸ் பாதித்து இறந்த நபரின் வீட்டை சுற்றி 3 கி.மீ. சுற்றளவு தூரம் உள்ள பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள பகுதிக்குள் வெளியில் இருந்து நபர்கள் வரவும், இங்குள்ள மக்கள் வெளியே செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் முகக்கவசம், சமூக இடைவெளியை கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இறந்த நபருடன் தொடர்பில் இருந்த நபர்களின் பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அனைவரும் தங்களை தனிமைப்படுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை? ஐகோர்ட் கேள்வி

**சென்னை, ஜூலை 15-**

தமிழகம் முழுவதும் எத்தனை வழக்குகளில் பிடிவாரண்ட்கள் பிறப்பிக்கப்பட்டு, நிலுவையில் உள்ளன என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய தமிழக டி.ஜி.பி. மற்றும் சென்னை காவல் ஆணையருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அல்லிகுளம் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட ராஜராஜ சோழன் என்பவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டை அமல்படுத்த, நீலாங்கரை போலீசாருக்கு உத்தரவிடக் கோரி ஜமுனா சிவலிங்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன், இந்த வழக்கில் கடந்த ஜனவரி மாதம் பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டை காவல் துறையினர்,

இதுநாள் வரை செயல்படுத்தாமல் உள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேபோல பல வழக்குகள், பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்ட நிலைலேயே உள்ளதாக குறிப்பிட்ட நீதிபதி, மாஜிஸ்திரேட் மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் பிடிவாரண்ட்கள் அடிப்படையில், குறித்த காலத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிடித்து, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். இதை விடுத்து, எந்த நடவடிக்கையும் எடுக்காமல், வாரண்ட்களை நிலுவையில் வைத்திருக்க காவல் துறையினருக்கு அதிகாரம் இல்லை என தெரிவித்த நீதிபதி, தமிழகம் முழுவதும் எத்தனை வழக்குகளில் பிடிவாரண்ட்கள் பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளன என்பது குறித்து ஜூலை 23ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய தமிழக டி.ஜி.பி.க்கும், சென்னை மாநகர காவல் ஆணையருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

### தமிழகத்தில் பள்ளிக்கூடங்களில்

# நடைமுறைக்கு வந்தது 'ப; வடிவ வகுப்பறைகள்

**சென்னை, ஜூலை 15-**

தமிழகத்தில் பள்ளிக்கூடங்களில் "ப" வடிவ வகுப்பறைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

கேரளாவில் பள்ளி வகுப்பறைகளில் கடைசி இருக்கை மாணவர் என்ற வார்த்தை இருக்கக் கூடாது என்ற நோக்கில், 'ப' வடிவில் வகுப்பறைகளில் இருக்கைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கேரளாவைத் தொடர்ந்து தற்போது தமிழ்நாட்டிலும் அதனை அமல்படுத்த பள்ளிக்கல்வித்துறை உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

அதன்படி, இதுபோல் இருக்கைகள் அமைக்கப்பட்டால், ஒவ்வொரு மாணவரும் கரும்பலகையையும், ஆசிரியரையும் தெளிவாக பார்க்க முடியும். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எளிதான அணுகுமுறை உருவாகும். ஆசிரியர்கள் மாணவர்களை உன்னிப்பாக கண்காணிக்க முடியும். ஆசிரியர்கள் கூறுவதை மாணவர்கள் கேட்பதில் இருக்கும் சிரமம் குறையும் என கல்வித்துறை தெரிவித்திருக்கிறது. மேலும் இருக்கைகள் அமைக்கப்படுவது போல, அதற்கேற்ற காற்றோட்ட வசதி, ஒளி வசதி ஆகியவற்றையும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில், தமிழகத்தில் பள்ளிக்கூடங்களில் "ப" வடிவ வகுப்பறைகள் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

மாணவர்களின் கவனச் சிதறலை தடுக்கவும், `கடைசி பெஞ்ச்' முறையை மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

# இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 175 கோவில்களில் கும்பாபிஷேகம்

### அமைச்சர் சேகர்பாபு தகவல்

**ஈரோடு, ஜூலை 15-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் இதுவரை 3 ஆயிரத்து 325 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு உள்ளதாக அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

ஈரோடு திண்டல் வேலாயுதசாமி கோவிலில் ராஜகோபுரத்துடன் கூடிய மலைப்படிக்கட்டுகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. அங்கு ஆசியாவிலேயே முதல் முறையாக 186 அடி உயரமுள்ள பிரமாண்ட முருகன் சிலை அமைக்கப்பட உள்ளது.

இதற்கான பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் முத்துசாமி ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது ராஜகோபுரம் அமைக்கும் பணிகளையும், சிலை வைக்கப்பட உள்ள இடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் பணிகளின் விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

அதன்பின்னர் அமைச்சர் சேகர்பாபு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் ஏராளமான கோவில்களில் திருப்பணிகள் நடந்து வருகிறது. இதில் இதுவரை 3 ஆயிரத்து 325 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு உள்ளது. இந்த எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 3 ஆயிரத்து 500 ஆக அதிகரிக்கும். இதற்காக அரசின் சார்பில் ரூ.1,120 கோடி மானியமாக வழங்கப்பட்டு உள்ளது.

சுவாமிமலையில் 100 படிகள் உள்ளன. அங்கு முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் செல்ல சிரமப்படுகின்றனர்.

எனவே லிப்ட் அமைக்க ஏற்பாடு நடக்கிறது. மருதமலையில் புதிய பிரமாண்ட சிலை அமைக்கப்பட உள்ளது. அங்கு 110 படிகள் இருப்பதால், லிப்ட் அமைக்கும் பணி நடக்கிறது. இந்த ஆட்சியில் கோவில்கள் சீரமைப்பு பணிக்காக ரூ.1,400 கோடி நன்கொடை வந்துள்ளது. கடந்த எந்த ஆட்சியிலும் இதுபோன்ற தொகை வரவில்லை. சென்னிமலை முருகன் கோவில் மலைப் பாதை சீரமைப்பு தொடர்பாக கடந்த 20 நாட்களுக்கு முன்பு வனத்துறை அமைச்சர் கண்ணப்பன் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். இதற்கான அனுமதி பெறும் பணி விரைவுபடுத்தப்பட்டு உள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் சாலைகள் அமைக்கும் பணி நிறைவு பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# விமான விபத்துக்கு பராமரிப்பு பிரச்சனைகள் காரணமில்லை

### ஏர் இந்தியா சி.இ.ஓ. தகவல்

**புதுடெல்லி, ஜூலை 15-**

அகமதாபாத் விமான விபத்துக்கு இயந்திரவியல் (மெக்கானிக்கல்), பராமரிப்பு சார்ந்த (மெயின்டனன்ஸ்) பிரச்சினைகள் காரணமாக இருக்கவில்லை என ஏர் இந்தியா சி.இ.ஓ. தெரிவித்துள்ளார்.

ஏர் இந்தியாவின் போயிங் 787 விமானம் விபத்துக்குள்ளானது தொடர்பான முதற்கட்ட அறிக்கை கடந்த 12-ம் தேதி வெளியானது. இதையடுத்து, ஏர் இந்தியாவின் சி.இ.ஓ. கேம்பல் வில்சன், நிறுவன சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "விமான விபத்து நிகழ்ந்த பிறகு சில நாட்களுக்குள் ஏர் இந்தியாவின் ஒவ்வொரு போயிங் 787 விமானமும் சரிபார்க்கப்பட்டது. அனைத்து விமானங்களும் பயன்பாட்டுக்கு ஏற்றதாக இருந்தன. தேவையான அனைத்து சோதனைகளையும் நாங்கள் தொடர்ந்து மேற்கொள்கிறோம். தற்போது வெளியாகி உள்ள முதற்கட்ட அறிக்கையில், விமானத்தில் இயந்திரவியல் மற்றும் பராமரிப்பு சார்ந்த பிரச்சினைகள் இருந்ததாக சுட்டிக்காட்டப்படவில்லை. ஏனெனில், அனைத்து கட்டாய பராமரிப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. விசாரணை இன்னும் முடியவில்லை. அதுவரை, முன்கூட்டியே முடிவுகளை எடுப்பதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். முழுமையான, விரிவான விசாரணையை நடத்த தேவையான அனைத்தையும் விசாரணை அதிகாரிகள் பெறுவதை உறுதி செய்ய நாங்கள் தொடர்ந்து அவர்களுக்கு ஒத்துழைப்போம்" என கேம்பல் வில்சன் தெரிவித்துள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும் போது லாக்-அப் மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுவிட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப்போல் காட்டிக்கொள்கிறார்கள். இது நகைச்சுவையாக பார்க்கப்படுகிறது. அவர்கள் இப்போது லாக்-அப் மரணங்களுக்கு எதிராக பேசுகிறார்கள்.

- கனிமொழி



ரயில்வே துறைக்கு தனி பட்ஜெட் இல்லாததே விபத்து, சீர்கேடுகளுக்கு காரணம். பொது பட்ஜெட்டில் உள்ள ரயில்வே தனி பட்ஜெட்டுக்கு மாற்றப்பட வேண்டும். ஊழியர் பற்றாக்குறையை போக்க வேண்டும். எரி பொருள்களை கொண்டு போகும் சரக்கு ரயில்களில் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து உறுதிப் படுத்திய பின்னரே இயக்க உத்தரவிட வேண்டும்.

- ராமதாஸ்



அ.தி.மு.க. ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பது தான் தற்போதைய நோக்கம். அ.தி.மு.க.வில் மீண்டும் இணைய எனக்கு எந்த நிபந்தனையும் இல்லை. உடன் இருப்பவர்களுக்கு பதவி பெற்றுத்தரப்படும். அ.தி.மு.க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதால் எடப்பாடி பழனிசாமி குறித்து விமர்சிக்கவில்லை.

- ஓ.பன்னீர் செல்வம்



ஆன்லைன் சூதாட்டம் தமிழகத்தில் தொடர அனுமதித்தால் லட்சக்கணக்கான குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வரும் நிலை ஏற்படும். அதைத் தடுக்கும் வகையில் ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு சுப்ரீ கோர்ட்டில் தடை பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அன்புமணி

# திருவொற்றியூரில் ரூ.10 லட்சத்தில் சத்துணவு சமையல் கூடம்: கவுன்சிலர் கார்த்திக் திறந்து வைத்தார்



திருவொற்றியூர்.ஜூலை.15

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் 7 வது வட்டத்திற்கு உட்பட்ட இராஜாஜி நகர்வ.உ.சி.தெருவில் தெருவிளக்கு அமைக்கும்பணிகளுக்கு 7 வது வட்ட அதிமுக மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் பூஜை போட்டு பணிகளை துவக்கி வைத்தார்.

அதன் பின்னர் கார்கில் வெற்றி நகரில் மாநகராட்சி தொடக்கப்பள்ளி மாணவ மாணவி களுக்காக ரூபாய் பத்து லட்சம் செலவில் சத்துணவு சமைத்திட மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டுநிதியில் கட்டப்பட்ட சத்துணவு சமையல் கூடத்தை மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் திறந்துவைத்தார். சத்துணவு சமையல் கூடம் திறந்துவைக்கபட்டவுடன் எம்ஜிஆர் மன்ற இணைசெயலாளர் கதிர்வேல், வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டிபன், மற்றும் மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் இந்த ஆட்சியில் வார்டு மேம்பாட்டுநிதியில் செய்யப்பட்ட திட்டப் பணிகள் குறித்து விளக்கிக் கூறினார்.

முடிவில் பொதுமக்கள் 200பேருக்கு அன்னதானம் வழங்கி அங்குள்ள தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கேசரி இனிப்புடன் கூடிய மதியஉணவை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மணலி நகராட்சி முன்னாள் கவுன்சிலர் ஜோசப் முன்னாள் வட்ட துணைசெயலாளர் ஏ.செந்தூர் பாண்டி முன்னாள் வட்ட தலைவர் ஸ்டாலின், ராஜேந்திரன் பாசறை செயலாளர் ராஜேஷ், அம்மா பேரவை தலைவர் ராஜேஷ், அண்ணா தொழிற்சங்க செயலாளர் தசரதன், வட்ட பிரதிநிதி தமிழரசி மகளிர் அணி துணை செயலாளர் அமுதா, மேற்கு வட்ட இணை செயலாளர் மல்லிகா, மணிவேல், இ.பார்த்தசாரதி, மதியழகன், அரவிந்த், தனசேகர், நாகராஜ், அம்மா பேரவை செயலாளர் சுப்பிரமணியம் சொ.மாடசாமி, ரஞ்சித், பொன்.செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்பு பணி: மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்



சென்னை,ஜூலை.15

மேயர் ஆர்.பிரியா, தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 9 மண்டலங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்புப் பணியினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் (14.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்புப் பணி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க.நகர், கோடம்பாக்கம், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 6 மண்டலங்களில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் அடையாறு ஆகிய 9 மண்டலங்களில் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. டார்கஸ் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்பு, CBR வழிகாட்டி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் படி, வீடுகள்தோறும் நேரில் சென்று மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது. ஒரு மாற்றுத்திறனாளியும் புறக்கணிக்கப்படக் கூடாது. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் மற்றும் நலன்கள் சமமாக கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான அரசின் திட்டங்கள், சிகிச்சைகள், மறுவாழ்வு சேவைகள் மற்றும் ஆலோசனை ஆதரவுகளைப் பெற்றிடும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்காக தமிழ்நாடு அரசு கொண்டு வருகிற முக்கியத்துவமிக்க திட்டங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வு அடையவும், இத்திட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு பணியானது 14.07.2025 முதல் செப்டம்பர் 2025 இறுதிவரை நடைபெறவுள்ளது. இப்பணிகளுக்காக சுமார 70 சமூக வழி நடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்கக் கணினியின் வாயிலாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் செயலியில் முதற்கட்டமாக மாற்றுத்திறனாளிகளை கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வார்கள். இதனைத் தொடர்ந்து, அவர்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து வழங்கப்படும் சேவைகளை பதிவு செய்யும் பணியினை மேற்கொள்வார்கள்.மேயர் பேசும்போது தெரிவித்ததாவதுதமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் அவர்களுக்கு முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதற்காக மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்புப் பணி தற்போது தொடங்கப்படுகிறது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109க்குட்பட்ட எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தங்கும் விடுதி மற்றும் உடற்பயிற்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்புப் பணியானது, ஏற்கனவே ஆறு மண்டலங்களில் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது 9 மண்டலங்களில் இந்தக் கணக்கெடுப்புப் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் நிலை, அவர்களின் இருப்பிடம், அவர்களுக்குத் தேவைப்படும் நலத்திட்ட உதவிகள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட கணக்கெடுப்புப் பணி நடைபெறுகிறது.இந்தக் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்ள சமூக வழிநடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்பவர்கள் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர்ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் திரு. எஸ்.குமார் (சென்னை (தெற்கு)), ஆர்.பாலாஜி (சென்னை (வடக்கு)), டார்கஸ் ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் ஐஸ்வர்யா ராவ், தமிழ்நாடு உரிமைகள் திட்ட மாநில மேலாளர்சங்கர் சகாயராஜ், சமூக வழிநடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# யானைகவுனி பகுதியில் செல்போன் உதிரிபாகங்கள் விற்பனை உரிமையாளர் கடத்தல்: 3 பேர் கைது

சென்னை ஜூலை 15-

சென்னை, சௌகார்பேட்டை பகுதியில் வசித்து வரும் சுமேற்சிங், என்பவர் ரிச்சி தெருவில் செல்போன் உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். சுமேற்சிங் கடந்த 12 ந் தேதி அன்று அதிகாலை சௌகார்பேட்டை, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் இருந்த போது, அங்கு வந்த சிலர் மேற்படி சுமேற்சிங்கை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றிச் சென்று அண்ணாநகர் பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பில் அடைத்த வைத்து, ரூ.50 லட்சம் கேட்டு சுமேற்சிங்கின் தந்தை காலுசிங்கிற்கு போன் செய்துள்ளனர். காலுசிங் அரவது நண்பர் தினேஷிற்கு இது பற்றி தகவல் தெரிவித்துள்ளார். தினேஷ் உடனே காவல் கட்டுப்பாட்டறைக்கு தகவல் தெரிவித்ததின் பேரில் C-2 யானைகவுனி காவல் நிலைய போலீசார் விரைந்து செயல்பட்டு தீவிர விசாரணை செய்து கடத்தப்பட்ட சுமேற்சிங்கை அண்ணாநகர் பகுதியில் மீட்டனர். இது குறித்து சுமேற்சிங் கொடுத்த புகாரின் பேரில் யானைகவுனி காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை செய்து மேற்டி கடத்தல் வழக்கில் சம்பந்தப்பட்ட 1.நவீன்குமார், 2.சரத், 3.சுரேந்தர், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து கடத்தலுக்கு பயன்படுத்திய கார் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் சுமேற்சிங் முறையான கணக்கில் பணம் பெற்று, கணக்கில் காட்டாத கூடுதல் பணம் தருவதாக கூறி ரூ.50 லட்சத்தை சலீம் என்பவரிடம் பெற்று கூறிய படி திரும்ப முழுபணத்தையும் தராமல் ஏமாற்றிய நிலையில், சலீம் என்பவரிடம் பணம் பெற்று கொடுத்த மேற்படி எதிரிகள் நயின்குமார், சரத் மற்றும் சுரேந்தர் ஆகிய மூவரும் சேர்ந்து சுமேற்சிங்கை கடத்தி பணம் கேட்டு மிரட்டியது தெரியவந்தது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட சரத் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், சுரேந்தர் ஜி.எஸ்.டி. மத்திய கலால் வரில் நிர்வாக உதவியாளர் யாக வேலை செய்து வருவதும் தெரியவந்து. மேற்படி வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான சலீம் என்பவரை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.



**காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் முதலமைச்சர் ஊரக வளர்ச்சித் துறைக்கு புதிய நான்கு சக்கர வாகனங்களை வழங்க உத்தரவிட்டிருந்தார். இந்த வாகனங்களை உதவி இயக்குனர் உமாசங்கர் ( ஊராட்சிகள் ), உதவி திட்ட அலுவலர் ( உட்கட்டமைப்பு) தண்டபாணி ஆகியோருக்கு மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி நேற்று வழங்கினார்.**

# எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் போதைப்பொருட்கள் வைத்திருந்த 4 பேர் கைது

சென்னை ஜூலை 15-

சென்னை எம் ஜி.ஆர் நகரில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருடன் ஒருங்கிணைந்து, 12 ந் தேதி அன்று மதியம், எம்.ஜி.ஆர். நகர், கே.கே.சாலையிலுள்ள ஒரு ஓட்டல் அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் வைத்திருந்த 1.சங்கரநாராயணன், 2.பிரசாந்த், 3.ஆகாஷ்குமார், 4.மணிகண்டசாமி, ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

. அவர்களிடமிருந்து 3 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் 28 கிராம் கஞ்சா பேஸ்ட் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஆகாஷ்குமார் மீது ஏற்கனவே ஒரு போதைப்பொருள் வழக்கு உள்ளதுரியவந்தது.

# அரும்பாக்கம் பகுதியில் முதியவர் தவறவிட்ட 1 சவரன் தங்க வளையலை மீட்டு போலீசார் ஒப்படைப்பு

சென்னை ஜூலை 15-

சென்னை, அரும்பாக்கம் பகுதியில் வசித்து வரும் கேசவன், என்பவர் கடந்த 10.ந் தேதி அன்று காலை அவரது வீட்டிலிருந்து இரண்டு தங்க வளையல்களை எடுத்துக் கொண்டு அரும்பாக்கத்தில் உள்ள ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் 1 தங்க வளையலை அடகு வைத்து விட்டு, பின் அருகில் உள்ள வங்கியில் பணம் செலுத்திவிட்டு, வீட்டிற்கு வந்து பார்த்த போது 1 தங்க வளையல் காணாமல் போனது தெரியவந்தது.

**கேமரா பதிவு**

இது குறித்து கேசவன் அரும்பாக்கம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விரைந்து செயல்பட்டு, விசாரணை செய்து, மேற்படி சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, தங்க வளையல் எடுத்த நபரை கண்டறிந்து, அவரிடமிருந்து 1 சவரன் எடையுள்ள 1 தங்க வளையல் மீட்கப்பட்டு முதியவர் கேசவனிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது.

# காதல் திருமணம் செய்ய உதவிய நண்பர்களுக்கு கஞ்சா விருந்து: புதுமாப்பிள்ளை உட்பட 10 பேர் கைது

சென்னை ஜூலை 15-

காதல் திருமணம் செய்ய உதவிய நண்பர்களுக்கு எம்ஆர்சி நகரில் உள்ள ஓட்டலில் மது மற்றும் ஓஜி கஞ்சா விருந்து வைத்த தொழிலதிபரான புதுமாப்பிள்ளை உட்பட 10 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 5 கிராம் கஞ்சா, 48 கிராம் உயர்ரக ஓஜி கஞ்சா, 11 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சென்னை பட்டினப்பாக்கம் காவல் எல்லையில் உள்ள எம்ஆர்சி நகரில் உள்ள தனியார் நட்சத்திர ஓட்டல் ஒன்றில் கொளத்தூர் பகுதியை சேர்ந்த சந்தோஷ் (27). இவர் இளம் பெண் ஒருவரை பல ஆண்டுகள் காதலித்து வந்துள்ளார். இவரது காதலுக்கு பெண் வீட்டார் ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் சந்தோஷ் ஒரு கட்டத்தில் தனது நண்பர்கள் துணையுடன் கடந்த வாரம் இளம் பெண்ணை திருமணம் செய்தாக கூறப்படுகிறது.பல ஆண்டுகள் காத்திருந்து காதல் திருமணம் செய்ததால் சந்தோஷ் திருமணத்திற்கு உதவிய நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் பட்டினப்பாக்கம் எம்ஆர்சி நகரில் உள்ள ஓட்டல் ஒன்றில் நேற்று திருமண வரவேற்பு நடத்தினார். அந்த திருமண வரவேற்பு முடிந்த உடன் சந்தோஷ் தனது நண்பர்களுக்கு மட்டும் மதுபானங்கள் மற்றும் உயர் ரககத்தை கொண்ட ஓஜி கஞ்சா பார்ட்டி கொடுத்துள்ளார். மேலும் நண்பர்களுக்கு இளம் பெண்களும் சப்ளை செய்ததாக கூறப்படுகிறது. ஓஜி வகை கஞ்சா பார்ட்டியில் பயன்படுத்துவது குறித்து ஓட்டல் நிர்வாகத்திற்கு தெரியவந்தது. பொதுவாக ஓட்டல்களில் இரவு நேர பார்ட்டிகளில் தடை செய்யப்பட்ட ஓஜி கஞ்சா, மெத்தப்பெட்டமைன், கொக்கைன் உள்ளிட்ட உயர் ரக போதை பொருட்கள் பயன்படுத்த கூடாது என்று போதை பொருள் தடுப்பு பிரிவு கடுமையான உத்தரவு போட்டுள்ளது.இதனால், அச்சமடைந்த ஓட்டல் நிர்வாகம் திருமணம் வரவேற்பு நிகழ்ச்சியில் நடந்த பார்ட்டில் ஓஜி வகை கஞ்சா பயன்படுத்துவது குறித்து ரகசியமாக பட்டினப்பாக்கம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்படி இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் நேற்று இரவு சம்பந்தப்பட்ட எம்ஆர்சி நகரில் உள்ள தனியார் ஓட்டலில் இரவு விருந்து அளிக்கப்பட்ட அறையில் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் காதல் திருமணம் செய்த சந்தோஷ் தனது நண்பர்களுக்கு கஞ்சா மற்றும் ஓஜி வகை கஞ்சா பார்ட்டியில் வழங்கியது உறுதியானது. உடனே பார்ட்டி கொடுத்த சந்தோஷை பிடித்து போலீசார் விசாரணை நடத்திய போது, தனது நண்பர்களுக்கு பெரிய அளவில் விருந்து வழங்க வேண்டும் என்ற நோக்கில் சினிமா துறையில் பணியாற்றும் தனது நண்பரான சூளை பகுதியை சேர்ந்த ஜெகதீஸ்வர்(37) என்பவரிடம் கூறியுள்ளார்.அதற்கு ஜெகதீஸ்வர் பார்ட்டிக்கு தேவையான போதை பொருள் சப்ளை நான் பார்த்து கொள்கிறேன் என்று கூறியுள்ளார். அதன்படி பார்ட்டிக்கு தேவையான கஞ்சா மற்றும் ஓஜி வகை கஞ்சாவை ஜெகதீஸ்வரன் வாங்கி வந்து சந்தோஷிடம் கொடுத்துள்ளார். அதன்பிறகு தான் அனைத்து நண்பர்களுக்கும் போதை பொருள் பார்ட்டியில் வழங்கப்பட்டது தெரியவந்தது. அதைதொடர்ந்து போலீசார் அதிரடியாக காதல் திருமணம் செய்த கொளத்தூர் பகுதியை சேர்ந்த தொழிலதிபரான சந்தோஷ் மற்றும் கஞ்சா வாங்கி கொடுத்த சூளை பகுதியை சேர்ந்த ஜெகதீஸ்வர் மற்றும் அவர்களின் நண்பர்களான அம்பத்தூர் பகுதியை சேர்ந்த தீபக்(27), புழல் சூரபட்டு பகுதியை சேர்ந்த ஆராதாத அக்ஷய்ராஜீ(21), திருவள்ளூரை சேர்ந்த ரோகித்(21), கிருஷ்ணபரிக், மனிஷ்சரத்குமார்(32), பூந்தமல்லியை சேர்ந்த மதன்குமார்திருவள்ளூரை சேர்ந்த ஜிலான்அம்பத்தூரை சேர்ந்த காமேஷ்(25), ஆகிய 10 பேரை கைது செய்தனர்.

# திடீர் மாரடைப்பால் டிரைவர் சாவு: தறிகெட்டு ஓடிய மாநகர பஸ் மோதியதில் முதியவர் பலி

சென்னை ஜூலை 15-

அரும்பாக்கம் 100 அடி சாலையில், மாநகர பஸ்சை இயக்கிய டிரைவர் நெஞ்சு வலி ஏற்பட்டு உயிரிழந்ததால், கட்டுப்பாட்டை இழந்த பஸ் தாறுமாறாக ஓடி சாலையில் நடந்துசென்ற முதியவர் மீது மோதியதால் அவர் பரிதாபமாக இறந்தார். கிளாம்பாக்கத்தில் இருந்து தடம் எண்.70.சி என்ற மாநகர பேருந்து, நேற்று மும் தினம் அதிகாலை கோயம்பேடு புறப்பட்டது. டிரைவர் வேலுமணி (58) என்பவர் பஸ்சை ஓட்டினார்.காலை 6 மணி அளவில் அரும்பாக்கம் 100 அடி சாலையில் சென்றபோது டிரைவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதால், அவரது கட்டுப்பாட்டை இழந்த பஸ், தாறுமாறாக ஓடியுள்ளது. இதனால் பயணிகள் கூச்சலிட்டுள்ளனர். இதையடுத்து பஸ்சை ஓரம்கட்ட டிரைவர் முயன்ற போது கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நடந்து சென்றவர்கள் மீது மோதியது. mஇதில், திருவல்லிக்கேணி லால் முகமது தெருவை சேர்ந்த சசிகுமார் (63) என்பவர் பரிதாபமாக இறந்தார்.படுகாயமடைந்த மற்றொருவரை மீட்டு உடனடியாக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த விபத்தில் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த 4 கார்கள், பைக் சேதமடைந்தது. இந்த பகுதியில் மக்கள் திரண்டதால் பரபரப்பு நிலவியது.தகவலறிந்த அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வு போலீசார் விரைந்து வந்து, டிரைவரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அவரை பரிசோதனை செய்த போது வழியிலேயே இறந்து விட்டார் என்பது தெரிந்தது. அவரது உடலை அதே மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து அண்ணாநகர் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துகின்றனர்.

# மாவா புகையிலை பொருட்கள் வைத்திருந்த 2 வட மாநில வாலிபர்கள் கைது

சென்னை ஜூலை 15-

சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், கடந்த 12.ந் தேதி அன்று மதியம், திருவல்லிக்கேணி, எல்லீஸ் ரோடு, தௌலத்கான் தெருவில் தீவிரமாக கண்காணித்து அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மாவா புகையிலை பொருட்களை சட்டவிரோத விற்பனைக்காக வைத்திருந்த 1.பிரவீன்குமார் பதக், 2.வினோத்குமார் சூர்யமணி பதக், ஆகிய இருவரைகைது செய்தனர். அவர்களிடமிருந்து 54.3 கிலோ எடை கொண்ட மாவா மற்றும் மாவா தயாரிக்க பயன்படும் மூலப்பொருட்களான ஐர்தா, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் 2 கிரைண்டர்கள் மற்றும் பணம் ரூ.200/- பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும், விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# 40 டி.எஸ்.பிக்கள் பணியிட மாற்றம்: டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவு

சென்னை ஜூலை 15-

நிர்வாக காரணங்களுக்காக காவல்துறையில் அவ்வப்போது பணியிட மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன்காரணமாக துணை காவல் கண்காணிப்பாளர், துணை ஆணையர் என 40 காவல் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். சென்னை, கடலூர், திருப்பத்தூர்,சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து காவல் அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகரக் காவல்துறையின் எம்கேபி நகர் சரக காவல்துறை உதவி ஆணையராக உள்ள மணிவண்ணன் மன்னார்குடி காவல் துணைக் கண்காணிப்பாளராக மாற்றப்பட்டுள்ளார். மேலும் மத்திய குற்றப்பிரிவு உதவி ஆணையராகவுள்ள காவ்யா, மணப்பாறை காவல் துணைக் கண்காணிப்பாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கோவை சிபிசிஐடி டிஎஸ்பி சரவணன், சேலம் காவல் உதவி ஆணையர் செல்வம், தீவிரவாத தடுப்புப் பிரிவு டிஎஸ்பி பண்டாரசாமி, சென்னை திருமங்கலம் உதவி ஆணையர் பிரம்மானந்தன் உள்ளிட்டோரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீட்டு சுகாதார உதவியாளர் பயிற்சி: தாட்கோ மேலாண்மை இயக்குநர் தகவல்

சென்னை ஜூலை 15-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் டால்மியா பாரத் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு வீட்டு சுகாதார உதவியாளர் பயிற்சி வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் டால்மியா பாரத் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீட்டு சுகாதார உதவியாளர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்காளவும் 18 முதல் 35 வயதுவரை உள்ள இருக்க வேண்டும். பத்து மற்றும் பன்னிரெண்டாம், முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்புடன் ஆரம்பகால மாத ஊதியமாக ரூ.15,000/- முதல் ரூ.17000/- வரை கிடைக்க வழிவகை செய்யப்படும்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 க்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சி பெற தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரில் விண்ணப்பிக்கலாம் இப்பயிற்சிக்கான கால அளவு இரண்டு மாதம். மேலும் சென்னை உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி உணவுக்கான செலவினம் நிறுவனம் மூலமாக வழங்கப்படும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# துணை ஆணையர் அதிவீரபாண்டியன் விளக்கம் தர உத்தரவு

சென்னை ஜூலை 15-

சென்னை கோயம்பேடு துணை ஆணையர் அதிவீரபாண்டியன் காவல் ஆணையரகத்தில் விளக்கம் தர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கோயம்பேடு துணை ஆணையர் குறித்து பெண் ஒருவர் சமூக வலைதளத்தில் புகார் கூறியிருந்தார். பெண்ணின் புகாரை அடுத்து கோயம்பேடு துணை ஆணையர் விளக்கம் தர காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

# சென்னை மாநகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடக்கம்

சென்னை ஜூலை 15-

சென்னை மாநகராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் இன்று தொடக்கப்பட உள்ளது. அக்டோபர் மாதம் வரை 15 மண்டலங்களிலும் உள்ள ஒவ்வொரு வார்டிலும் தலா 2 முகாம்கள் நடைபெறும்.

ஒவ்வொரு வார்டிலும் தலா 2 முகாம்கள் வீதம் 200 வார்டுகளிலும் மொத்தம் 400 முகாம்கள் அமைக்கப்படுகிறது. முதற்கட்டமாக ஆகஸ்டு 14-ந்தேதி வரை 109 வார்டுகளில் முகாம் நடைபெற உள்ளது. நாளொன்றுக்கு சராசரியாக 6 வார்டுகள் வீதம் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்கள் நடைபெறும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

# திருச்சி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நடைபெறும் இடங்களில் தேவையான அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளது

## கலெக்டர் வே.சரவணன் தகவல்

**திருச்சி,ஜூலை.15-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்'' நாளை (15.07.2025) தொடங்கி வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் நடைபெறும் இடங்களில் தேவையான அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளது கலெக்டர் வே.சரவணன், தகவல்.

கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

'உங்களுடன் ஸ்டாலின்''- திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ளது. நமது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜுலை 15-ந் தேதி முதல் நவம்பர் 14 ந் தேதி முடிய மொத்தம் 351 முகாம்கள் நடைபெறவுள்ளது. இதில் மாநகராட்சி பகுதிகளில் 32 இடங்களிலும், முசிறி, துறையூர், இலால்குடி, துவாக்குடி மற்றும் மணப்பாறை ஆகிய 5 நகராட்சி பகுதிகளில் 48 இடங்களிலும், 14 பேரூராட்சிப் பகுதிகளில் 28 இடங்களிலும், 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 243 முகாம்கள் நடைபெறுவதற்கான திட்டங்கள் வகுக்குப்பட்டுள்ளது. சுமார் 9,30,000-ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



முதற்கட்டமாக ஜுலை 15 முதல் ஆகஸ்டு 14-ந் தேதி வரை, செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளில்;, ஒரு நாளுக்கு குறைந்தது 6 முகாம்கள் வீதம் 120 முகாம்கள் நடைபெறவுள்ளது. இதில் மாநகராட்சி பகுதிகளில் 8 முகாம்களும், நகராட்சி பகுதிகளில் 19 முகாம்களும், பேரூராட்சி பகுதிகளில் 14 முகாம்களும், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 79 முகாம்கள் என மொத்தம் 120 முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்களில் 3,97,236 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முகாம்களின் விபரம் பொதுமக்களை சென்றடைய ஏதுவாக, தன்னார்வலர்கள், மேற் பார் வை யா ளர் கள், முகாம்களில் மனுக்களை பதிவேற்றம் செய்யும் கணினி இயக்குபவர்கள் (னுயவய நுவெசல ழுpநசயவழசள), ஹேனயட ழுககiஉநசள நியமிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்ப படிவங்கள் மற்றும் அரசு நலத் திட்டங்கள் குறித்த கையேடு (Pயஅpடநவள) பெறப்பட்டு அதை உள்ளாட்சி அலுவலர்கள் மூலமாக தன்னார்வலர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 15.07.2025 முதல் 14.08.2025 முடிய நடைபெறவுள்ள முகாம் நடைபெறும் நாள் மற்றும் இடம் ஆகியவை உள்ளாட்;சி அமைப்புகள் மூலமாக ஒலிபெருக்கி கொண்டு பொதுமக்களுக்கு விளம்பரபடுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பத்திரிக்கைகள் மூலமாகவும் செய்திகள் வெளியிடபட்டுள்ளது.

இம்முகாம்களில், நகர்புறத்திற்கு 13 துறைகள் மூலமாக 43 சேவைகளும், ஊரகத்திற்கு 15 துறைகள் மூலமாக 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது. மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக மனுக்களை பெறுவதற்கு குறைந்தது 4 உழரவெநசள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாமிலும் மருத்துவத்துறை சார்பாக மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். காவல் துறை மூலம் அமைக்கப்பட உள்ளது. இ-சேவை மையமும் செயல்படும்.

வயது முதிர்ந்தவர்கள், மாற்றுதிறனாளிகள் போன்றவர்களுக்கு சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முகாம் நடைபெறும் இடத்திற்கு பொதுமக்கள் நேரடியாக வந்து ஆவணங்கள் மற்றும் மனுக்களை கொடுத்து பயனடைந்து கொள்ளலாம். மேற்படி மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டு உத்தரவுகள் வழங்கப்படும். பொதுமக்கள் அனைவரும் இந்த முகாம்களில் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் என்பதே மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோள் என மாவட்ட கலெக்டர் வே.சரவணன்,தெரிவித்தார்.



**தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமத்தில் உள்ள பிள்ளையார் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி தலா மூன்று லட்சத்திற்கான காசோலையினை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் வழங்கினார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் உடன் உள்ளார்.**

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 11 பயனாளிகளுக்கு ரூ. 5.43 லட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் மீ.தங்கவேல் வழங்கினார்



**கரூர்,ஜூலை.15-**

கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, வங்கிக்கடன்கள், பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 595 மனுக்கள் வரப்பெற்றன.

இதில், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரை தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 65 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தெரிவித்தார். இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ துறையின் மூலம் மகளிர் நில உரிமைத் திட்டத்தின் கீழ், 2 பயனாளிகளுக்கு தலா ரூ. 5.00 இலட்சம் மானியத்தில் நில உடைமை பத்திரங்களையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பாக காதொலி கருவிகள், டெய்ஸி பிளேயர், கருப்புக் கண்ணாடிகள், மூன்று சக்கர சைக்கிள், மடக்கு குச்சி மற்றும் பார்வையற்றோர்க்காக கைகடிகாரம் என 9 பயனாளிகளுக்கு ரூ. 43,548 மதிப்பீட்டிலும் என மொத்தம் 11 பயனாளிகளுக்கு ரூ. 5,43,548 மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், குளித்தலை சார் கலெக்டர் தி. சுவாதி ஶ்ரீ பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் இளங்கோ, தாட்கோ மேலாளர் முருகவேல், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் பிரகாசம், உதவி ஆணையர் (கலால்) கருணாகரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மோகன்ராஜ் மற்றும் மா வட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பாலசக்தி கங்காதரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# திருவாரூர் மற்றும் மன்னார்குடியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் இன்று துவங்குகிறது: மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன் பேட்டி

**திருவாரூர்,ஜூலை.15-**

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக கலெக்டர் வ.மோகனச்சந்திரன், செய்தியாளர்களை சந்தித்தார்.

கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது...

முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார்.



திருவாரூர் மாவட்டத்தில் முதல் முகாமினை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் முனை வர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், மரியாதைக்குரிய பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது. இந்நேர்வில், எதிர்வரும் 15.07.2025 செவ்வாய்கிழமை அன்று திருவாரூர், மன்னார்குடி மற்றும் கொரடாச்சேரி வட்டாரங்களிலும், திருவாரூர் மற்றும் மன்னார்குடி நகராட்சிகளிலும், கொரடாச்சேரி பேரூராட்சி ஆகிய ஆறு பகுதிகளிலும் மற்றும் 17.07.2025 வியாழக்கிழமை அன்று நன்னிலம், வலங்கைமான், திருத்துறைப்பூண்டி மற்றும் கோட்டூர் வட்டாரங்களிலும், கூத்தாநல்லூர் நகராட்சியிலும், பேரளம் பேரூராட்சி; ஆகிய ஆறு பகுதிகளிலும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் திட்டங்களை வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் ஜூலை முதல் அக்டோபர் வரை நகர்புறப் பகுதிகளில் 54 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 131 முகாம்களும் மொத்தம் 185 முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்ஃசேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கியுள்ளனர். அதன் அடிப்படையில் அட்டவணைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்கள் தொடர்புடைய முகாம்களில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் வ.மோகனச் சந்திரன், கேட்டுக் கொண்டுள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது



**புதுக்கோட்டை,ஜூலை.15-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது;

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் வகையில், வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல்; போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 544 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். இம்மனுக்களின் மீது விசாரணை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2025 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக புதிய வாகனங்களை வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வழங்கிய புதிய வாகனங்களின் சாவிகளை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் இன்றையதினம் வழங்கப்பட்டது எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா, தனித் துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.ஷோபா, உதவி ஆணையர் (கலால்) திருமால், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்புறம்பியத்தில் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்




**தஞ்சாவூர்,ஜூலை.15-**

தஞ்சாவூர் மாவட்டம் திருப்புறம்பியத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கும்பகோணம் மேற்கு ஒன்றிய செயலாளர் முத்துசெல்வம் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் கோபிநாத், மாவட்ட தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மணிமாறன், கிருபாகரன், சுப்பிரமணியன், துரைசாமி மற்றும் முருகமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேற்கு ஒன்றிய துணை செயலாளர் தங்க.தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கும்பகோணம் எம்எல்ஏ சாக்கோட்டை அன்பழகன் மற்றும் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளரும், கழக பேச்சாளருமான நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட சார் பணி அமைப்பாளர்கள் சுபா திருநாவுக்கரசு, சண்முகநாதன், முன்னாள் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் விஜயகுமார், மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் சண்முகம், அனிதா செல்வராஜ், இளங்கோ, மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி அன்பழகன் மற்றும் கும்பகோணம் மாநகர, மத்திய, கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், சுவாமிமலை, சோழபுரம், திருநாகேஸ்வரம் பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர். கூட்ட நிறைவாக மேற்கு ஒன்றிய பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.

# கருணாநிதியின் 102 -வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



**நாகப்பட்டினம்,ஜூலை.15-**

நாகை மாவட்டம் திருமருகல் அருகே அம்பல் ஊராட்சியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 -வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திருமருகல் ஒன்றியம் அம்பல் ஊராட்சியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 - வது பிறந்தநாள் விழா திமுக அரசின் 4- ஆம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் ஞாயிற்று கிழமை நடைப்பெற்றது. இக்கூட்டத்திற்கு திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் தலைமையில் நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் நடைப்பெற்றது,

இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் பொறக்குடி ப.செல்வம், கழக இளம் பேச்சாளர் வியானி விஷ்வா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர், கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.என்.கார்த்திக் பொதுக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சுரேஷ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜியாவுதீன், துணை அமைப்பாளர்கள் திருமலைவாசன், கலைவாணன், முருகானந்தம், மோகன்,வீரசெல்வம் மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,ஜூலை.15-**

நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்;; மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் ப.ஆகாஷ், தலைமையில் நடைபெற்றது. வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன், உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 210 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 08 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4,25,000ஃ- மதிப்பீட்டில் செயற்கை கால் அவயங்களையும், 02 செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3,250ஃ- வீதம் ரூ.6,500ஃ- மதிப்பீட்டில் காதொலிக்கருவியினையும் கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.ப¬¬வணந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கண்ணன், தனி துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம் அ.பரிமளாதேவி மற்றும் அரசு அலுவலர்கள்; பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கருப்பூர் மாவடி கருப்பண்ணசாமி கோயில் கும்பாபிஷேக விழா

**தஞ்சாவூர்,ஜூலை.15-**

திருவையாறு அருகே, கருப்பூர் பகுதியில் சித்தி விநாயகர், மாவடி கருப்பண்ணசாமி, ஐய்யனார் மதுரை வீரன் சுவாமி ஆலய கும்பாபிஷேக விழா இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. விழாவை முன்னிட்டு, ஆலயம் அருகே யாக குண்டங்கள் அமைத்து, காவிரி ஆற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தத்திற்கு நான்கு கால யாக பூஜைகள் நடந்தன. தொடர்ந்து கலசத்திற்கு துாப தீபங்கள் காண்பிக்கப்பட்ட பிறகு, மேளதாளங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் புனித நீரை தலையில் சுமந்து, கோவிலை சுற்றி வலம் வந்த பிறகு கோபுர கலசத்தின் மீது புனித நீரை ஊற்றி கும்பாபிஷேக விழாவை விமர்சையாக நடத்தினர். தொடர்ந்து மூலவருக்கு மகா தீபாரதனை காட்டப்பட்டது. பின் மாவடி கருப்பண்ணசாமி உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு புனித தீர்த்தத்தால் அபிஷேகம் நடைபெற்ற பின், பொதுமக்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. கருப்பூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் சுவாமி தரிசனம் செய்தனர். விழாவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. கோயில் அறங்காவலர் இராமதாஸ் ,துணைத் தலைவர் இளையராஜா ஆகியோர் கூறியதாவது: கோவில் திருப்பணிக்கு நிதி உதவி செய்த இந்து சமய அறநிலையத் துறைக்கும் பரிந்துரை செய்த திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன்,தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, தெற்கு ஒன்றிய செயலாளர் கௌதமன் ஆகியோருக்கு நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்

# திருவாரூர் மாவட்ட ஊராட்சி செயலருக்கு புதிய அரசு வாகனம்

## கலெக்டர்,எம்.எல்.ஏ வழங்கினர்



**திருவாரூர்,ஜூலை.15-**

தமிழக முதல்வரால் கடந்த 11ந்தேதியன்று ஊரக வளர்ச்சி துறையில் பல்வேறு நிலை அலுவலர்களுக்கு 198 வாகனங்கள் வழங்கப்பட்டு தலைமை செயலகத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சி செயலர் சந்தானம் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஈப்பு வாகனத்தின் சாவியினை மாவட்ட கலெக்டர் மோகனச் சந்திரன்,திருவாரூர் எம்.எல்.ஏ பூண்டி கலைவாணன் ஆகியோர் வழங்கி பார்வையிட்டனர்.அவ்வாறு வழங்கப்பட்ட வாகனம் உடனடியாக பயன்பாட்டிற்குகொண்டு வரப்பட்டது.

### நடத்தை விதிகளை மீறியதாக
# சிராஜுக்கு ஐ.சி.சி. அபராதம்




**லார்ட்ஸ், ஜூலை 15-**
2-வது இன்னிங்சின் போது பென் டக்கெட் விக்கெட்டை வீழ்த்திய சிராஜ், ஆக்ரோஷமாக கொண்டாடினார். டக்கெட் முகத்திற்கு முன்பு வந்து முறைத்தப்படி சென்றார். இதனால் ஐசிசி நடத்தை விதிகளை மீறியதற்காக முகமது சிராஜுக்கு அவரது போட்டிக் கட்டணத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**387 ரன்களுக்கு...**
இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லார்ட்சில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இந்தியா சார்பில் பும்ரா 5 விக்கெட்டும், சிராஜ், நிதிஷ் குமார் ரெட்டி தலா 2 விக்கெட்டும், ஜடேஜா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

**4-ம் நாள் ஆட்டம்...**
தொடர்ந்து ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 387 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டும், பென் ஸ்டோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதனையடுத்து 4-ம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்திய அணியின் துல்லியமான பந்து வீச்சில் இங்கிலாந்து 2-வது இன்னிங்சில் 192 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இந்தியா சார்பில் வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டும், பும்ரா, சிராஜ் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**ஆக்ரோஷமாக...**
இதையடுத்து, 193 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி 2-வது இன்னிங்சில் களமிறங்கியது. நான்காம் நாள் முடிவில் இந்தியா 4 விக்கெட்டுக்கு 58 ரன்கள் எடுத்துள்ளது. கே.எல்.ராகுல் 33 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். இந்நிலையில் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சின் போது பென் டக்கெட் விக்கெட்டை வீழ்த்திய சிராஜ், ஆக்ரோஷமாக கொண்டாடினார். டக்கெட் முகத்திற்கு முன்பு வந்து முறைத்தப்படி சென்றார். இதனால் ஐசிசி நடத்தை விதிகளை மீறியதற்காக முகமது சிராஜுக்கு அவரது போட்டிக் கட்டணத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


# லார்ட்ஸ் டெஸ்ட்: இந்திய அணி திணறல்

**லண்டன், ஜூலை 15-**
இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டில் இந்திய அணி 9 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது. களத்தில் ரவீந்திர ஜடேஜா மற்றும் முகமது சிராஜ் உள்ளனர்.

**58 ரன்களுக்கு...**
இங்கிலாந்து, லண்டனில் லார்ட்ஸ் திடலில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் இரு அணிகளுமே 367 ரன்கள் எடுத்தது. இரண்டாம் இன்னிங்ஸில் இங்கிலாந்து 192 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதனைத் தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 4-ஆம் நாள் முடிவில் 58 ரன்களுக்கு 4 ரன்களை இழந்தது. இந்நிலையில், நேற்று 5-ம் நாளில் தொடக்கத்திலேயே இந்திய அணி ரிஷப் பந்த், வாஷிங்டன் சுந்தர் விக்கெட்டினை இழந்தது.

**ஜடேஜாவுக்கு வாய்ப்பு...**
அதற்கடுத்து, ஜடேஜா - நிதீஷ் குமார் அதிகமான பந்துகளை எதிர்கொண்டார்கள். இங்கிலாந்து வீரர்கள் நிதீஷ் குமாரிடம் அதிகமாக பேசிப் பேசி அவரை தவறிழைக்க வைக்க முயன்றார்கள். இந்திய அணியின் 7-ஆவது விக்கெட் விழுந்து 14 ஓவர்களுக்குப் பிறகுதான் 8-ஆவது விக்கெட்டாக நிதீஷ் ஆட்டமிழந்தார். மதிய உணவு இடைவேளை விடப்பட்டுள்ளது. 39.3 ஓவர்களில் இந்திய அணி 112/8 ரன்கள் எடுத்துள்ளது. இந்தியா வெற்றி பெற 30 ரன்கள் தேவை என்றிருந்த நிலையில் களத்தில் ரவீந்திர ஜடேஜா மற்றும் முகமது சிராஜ் உள்ளனர். இங்கிலாந்து வெற்றிபெற 1 விக்கெட்டுகள் மட்டுமே தேவை. வெற்றியின் விளிம்பில் இங்கிலாந்து இருக்கிறது. ஜடேஜா வெற்றியைப் பெற்றுத் தருவாரா என இந்திய ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

# சாய்னா நேவாலின் திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்தது



**ஐதராபாத், ஜூலை 15-**
7 ஆண்டுகால திருமண வாழ்க்கை முடிவுக்கு வருவதாகவும், கணவர் காஷ்யப்பை பிரிவதாகவும் சாய்னா நேவால் அறிவித்துள்ளார்.

**2023-ல் ஓய்வு...**
இந்திய பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் (35), பேட்மிண்டனில் உலகின் நம்பர் 1 வீராங்கனையாக திகழ்ந்துள்ளார். ஒலிம்பிக்கில் வெண்கலம், உலக சாம்பியன்ஷிப்பில் 1 வெள்ளி, 1 வெண்கலம் என பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார். 2023-ம் ஆண்டு சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக சாய்னா அறிவித்தார். இதற்கிடையே, சாய்னா நேவாலுக்கும் முன்னாள் இந்திய பேட்மிண்டன் வீரரான பருபுல்லி காஷ்யப் என்பவருக்கும் கடந்த 2018-ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இருவரும் ஐதராபாத்தில் வசித்து வந்தனர்.

**வெவ்வேறு பாதை...**
இந்நிலையில், 7 ஆண்டு கால திருமண வாழ்க்கை முடிவுக்கு வருவதாகவும், கணவர் காஷ்யப்பை பிரிவதாகவும் சாய்னா நேவால் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக சாய்னா வெளியிட்டுள்ள இன்ஸ்டாகிராம் செய்தியில், இருவரும் வெவ்வேறு பாதையில் பயணிக்க முடிவுசெய்து பிரிகிறோம் என பதிவிட்டுள்ளார். பிரிவதற்கான காரணம் குறித்து சாய்னா எதுவும் தெரிவிக்கவில்லை.

### விம்பிள்டன் டென்னிஸ்:
# முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றார் சின்னர்



**லண்டன், ஜூலை 15-**
விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் முதல் முறையாக சின்னர் சாம்பியன் பட்டம் வென்றார்.

**ஆண்கள் ஒற்றையர்...**
கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், உலகின் நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், உலகின் நம்பர் 2 வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் உடன் மோதினார்.

**முதல் முறையாக...**
தொடக்கத்தில் அதிரடியாக ஆடிய அல்காரஸ் முதல் செட்டை 6-4 என கைப்பற்றினார். இதில் சுதாரித்துக் கொண்டு சிறப்பாக ஆடிய ஜானிக் சின்னர் அடுத்த 3 செட்களை 6-4, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வென்று முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

# ஐ.சி.சி. சிறந்த வீரர், வீராங்கனைகள்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. அதன்படி ஜூன் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட பரிந்துரை பெயர் பட்டியலை ஐ.சி.சி. அறிவித்திருந்தது.

அதன்படி ஜூன் மாத சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் எய்டன் மார்க்ரம் மற்றும் ரபடாவும், இலங்கை வீரரான பதும் நிசங்காவும் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் மார்க்ரம் ஜூன் மாத சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல் சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் ஹேய்லி மேத்யூஸ் (வெஸ்ட் இண்டீஸ்), தஸ்மின் பிரிட்ஸ் (தென் ஆப்பிரிக்கா) மற்றும் அபி பிளெட்சர் (வெஸ்ட் இண்டீஸ்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களில் சிறந்த வீராங்கனையாக ஹேய்லி மேத்யூஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இந்த விருதை பெறுவது இது 4-வது முறையாகும்.

### உள்ளே செல்ல அனுமதி மறுப்பு:
# தியாகிகள் கல்லறைக்கு சுவர் ஏறி சென்று முதல்வர் உமர் அஞ்சலி



**ஸ்ரீநகர், ஜூலை 15-**
தியாகிகளின் கல்லறைக்குச் செல்ல முதல்வர் உமர் அப்துல்லாவுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அவர் சுவர் ஏறி குறித்துச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

ஜம்மு காஷ்மீரை மகாராஜா ஹரி சிங் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது 1931-ம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியில் கொல்லப்பட்ட 21 பேரின் நினைவாக ஸ்ரீநகரில் தியாகிகளின் கல்லறை அமைக்கப்பட்டது. அவர்களின் நினைவாக ஜூலை 13-ம் தேதியை தியாகிகள் நினைவு தினமாக தேசிய மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட சில இயக்கங்கள் அனுசரித்து வருகின்றன.

இந்நிலையில், இந்த ஆண்டு தியாகிகள் நினைவு தினமான நேற்று முன்தினம் உமர் அப்துல்லா டெல்லியில் இருந்தார். இதை பலர் விமர்சித்த நிலையில், நேற்று முன்தினம் மதியம் டெல்லியில் இருந்து உமர் அப்துல்லா டெல்லி வந்தார். இதனிடையே, தியாகிகள் நினைவிடத்துக்குச் செல்வதற்கு தடை விதித்து போலீஸார் உத்தரவு பிறப்பித்திருந்தனர். மேலும், அப்பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

காவல் துறைக்கு தகவல் தெரிவிக்காமல் நினைவிடம் நோக்கி உமர் அப்துல்லா சென்றபோது போலீஸார் அவரை தடுத்து நிறுத்தினர். இதனால், வாகனத்தில் இருந்து கீழே இறங்கி நடந்து சென்றார். அவருடன் கட்சியினரும், பாதுகாப்பு அதிகாரிகளும் உடன் சென்றனர். கல்லறைக்குள் செல்வதற்கான வாசல் அடைக்கப்பட்டிருந்த நிலையில், கல்லறையின் சுற்றுச் சுவர் மீது ஏறி பின்னர் அதன் மீது அமைக்கப்பட்டிருந்த இரும்பு தடுப்புகள் மீதும் ஏறி கீழே குதித்து உமர் அப்துல்லா கல்லறைக்குள் சென்றார்.

அதன் பிறகு வாசல் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, மாநில அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கல்லறைக்குள் சென்று அஞ்சலி செலுத்தினர். மேலும், அங்குள்ள நினைவிடங்களில் மலர்களைத் தூவி மரியாதை செலுத்தினர்.

# இளநிலை பொறியியல் படிப்புகளுக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது

**சென்னை, ஜூலை 15-**
தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் 417 பொறியியல் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளில் 90,160 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கான கலந்தாய்வு தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் மூலம் இணையவழியில் நடத்தப்படுகிறது. அதன்படி நடப்பாண்டு கலந்தாய்வில் பங்கேற்க 3.02 லட்சம் பேர் விண்ணப்பித்தனர். அவர்களில் 2 லட்சத்து 41 ஆயிரத்து 641 மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றனர். இவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த ஜூன் 27-ந்தேதி வெளியானது.

தொடர்ந்து பொறியியல் படிப்புகளுக்காக கலந்தாய்வு கடந்த ஜூலை 7-ந்தேதி தொடங்கியது. முதல்கட்டமாக முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், விளையாட்டுப் பிரிவு மாணவர்கள் ஆகியோருக்கான சிறப்புப் பிரிவு கலந்தாய்வு ஜூலை 7-ந்தேதி முதல் 11-ந்தேதி வரை நடைபெற்றது. சிறப்புப் பிரிவில் மொத்தம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் இருந்த நிலையில் அதில் 994 இடங்கள் மட்டுமே நிரம்பின. இதில் 125 இடங்கள் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத ஒதுக்கீட்டில் நிரம்பின.

இதையடுத்து, பொதுப்பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு நேற்று முதல் தொடங்கியது. முதல் சுற்று கலந்தாய்வு ஜூலை 26-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் 39 ஆயிரத்து 145 மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். மாணவர்கள் தங்களுக்கு பிடித்தமான கல்லூரிகளை ஜூலை 16-ந்தேதிக்குள் தேர்வு செய்ய வேண்டும்.

இவர்களுக்கான தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை ஜூலை 17-ம் தேதி காலையில் வெளியிடப்படும். அதற்கு மறுநாள் (ஜூலை18) மாலை 5 மணிக்குள் ஒப்புதல் அளித்து மாணவர்கள் உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான் இறுதி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும். மேலும் இறுதி ஒதுக்கீடு ஆணை பெற்ற மாணவர்கள் ஜூலை 21-ம் தேதிக்குள் கல்லூரிகளில் சேர வேண்டும். இதற்கிடையே கலந்தாய்வின் போது விருப்பமான கல்லூரிகளை தேர்வு செய்தல், தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை பெறுதல், அதை உறுதி செய்து இறுதி ஒதுக்கீட்டு ஆணை பெறுவது என உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றி மாணவர்கள் செயல்பட வேண்டும். இது தொடர்பான கூடுதல் விவரங்களை https://www.tneaonline.org எனும் வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம். மொத்தம் 3 சுற்றுகளாக நடைபெறவுள்ள இந்தக் கலந்தாய்வு ஆகஸ்டு 20-ம் தேதியுடன் நிறைவு பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விருந்து நிகழ்ச்சியில் சாம்பியன்கள்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்றது. இதில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் விளையாடினர். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், உலகின் நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், உலகின் நம்பர் 2 வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் உடன் மோதினார்.

தொடக்கத்தில் அதிரடியாக ஆடிய அல்காரஸ் முதல் செட்டை 6-4 என கைப்பற்றினார். இதையடுத்து சுதாரித்துக் கொண்டு சிறப்பாக ஆடிய ஜானிக் சின்னர் அடுத்த 3 செட்களை 6-4, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வென்று முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இதேபோல் பெண்கள் ஒற்றையர் பிரிவில் போலந்தின் இகா ஸ்வியாடெக் முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இதனையடுத்து விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன்களுக்கான விருந்து நிகழ்வில் நடனமாடிய ஜன்னிக் சின்னர் மற்றும் இகா ஸ்வியாடெக் இணைந்து நடனமாடினர். இது தொடர்பான புகைப்படங்களை விம்பிள்டன் நிர்வாகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

## ஐதராபாத் அணிக்கு பயிற்சியாளர்

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் நிறைவு பெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை கைப்பற்றியது. இந்த சீசன் முடிவடைந்த சில தினங்களிலேயே அடுத்த சீசனுக்கான பேச்சுகள் எழ ஆரம்பித்து விட்டன. ஒவ்வொரு அணி நிர்வாகமும் அடுத்த சீசனுக்காக தங்களது அணிகளை தற்போதே தயார்படுத்தும் வேளையில் இறங்கி உள்ளன. ஏற்கனவே ராஜஸ்தான் அணியிலிருந்து சஞ்சு சாம்சனை சென்னை அணி வாங்க உள்ளதாக தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன. மற்ற அணிகளும் பயிற்சியாளர்கள் மற்றும் வீரர்களின் மாற்றங்கள் குறித்து ஆலோசித்து வருவதாக கூறப்பட்டன.

இந்நிலையில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராக இந்திய முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான வருண் ஆரோன் நியமிக்கப்பட்டுள்ளார். பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்த நியூசிலாந்து முன்னாள் வீரர் ஜேம்ஸ் பிராங்க்ளினுக்கு பதிலாக வருண் ஆரோன் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த சீசனிலிருந்து (2026) அவர் பயிற்சியாளராக செயல்பட உள்ளார். இந்திய அணிக்காக தலா 9 டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள வருண் ஆரோன் அதில் மொத்தம் 29 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். அத்துடன் 52 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 44 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

### தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்துங்கள்:
# 'உடன்பிறப்பே வா' நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்



**சென்னை, ஜூலை 15-**
தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்துங்கள் என்று நேற்று நடைபெற்ற 'உடன்பிறப்பே வா' நிகழ்வில் 3 மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபை தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளை அண்ணா அறிவாலயத்திற்கு அழைத்து ஆலோசித்து வருகிறார். தினமும் 3 சட்டசபை தொகுதிகளை சார்ந்த ஒன்றிய நகர பேரூர், பகுதி கழக செயலாளர்கள் மண்டல பொறுப்பாளர்கள் ஆகியோரை அழைத்து தனித்தனியாக தொகுதி நிலவரங்களை கேட்டறிகிறார். அந்த வகையில் ஏற்கனவே 36 தொகுதிகளை சார்ந்த நிர்வாகிகளிடம் தொகுதி நிலவரங்களை கேட்டறிந்துள்ளார்.

கட்சி நிர்வாகிகள் செயல்படும் விதம் குறித்தும் எம்.எல்.ஏ.வின் செயல்பாடு குறித்தும் இந்த கள ஆய்வில் கேட்டு இருக்கிறார். நிர்வாகிகள் செய்யும் தவறுகளையும் புள்ளி விவரத்துடன் சுட்டிக் காட்டுகிறார். ஓரணியில் தமிழ்நாடு பிரசார இயக்கத்தை வலுப்படுத்தவும் திமுக உறுப்பினர் சேர்க்கையை மேலும் தீவிரபடுத்தவும் கேட்டுக்கொள்கிறார்.

அந்த வகையில் நேற்று கொங்கு மண்டலத்திற்கு உட்பட்ட கோபிசெட்டிபாளையம், பெருந்துறை, குன்னூர் ஆகிய சட்டசபை தொகுதிகளை சார்ந்த நிர்வாகிகளை அழைத்து ஆலோசித்தார். இதில் தொகுதிகளின் வெற்றி நிலவரம் எந்த வகையில் உள்ளது. கட்சி நிர்வாகிகள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்றும் கேட்டறிந்தார். திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகிறதா? துண்டு பிரசுரங்கள் கொடுக்கிறீர்களா? என்றும் கேட்டறிந்தார். மேலும் தேர்தலுக்கான பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி 6-ம் நாளான நேற்று வடலூர் நான்குமுனை சந்திப்பில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

### தமிழக எம்.பி, எம்.எல்.ஏ.-க்கள் மீதான
# ஊழல் வழக்கு விவரங்களை வழங்க உத்தரவிடக்கோரி த.வெ.க. மனு

**சென்னை, ஜூலை 15-**
தமிழகத்தில் உள்ள எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான ஊழல் வழக்கு குறித்த விவரங்களை வெளியிட மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிடக் கோரி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தவெக சென்னை மண்டல வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் ஆதித்ய சோழன் தாக்கல் செய்த மனுவில், "தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையிடம் தமிழகத்தின் முன்னாள், இந்நாள் எம்.பி- எம்.எல்.ஏ.க்கள் மீதான ஊழல் வழக்குகள் குறித்த விவரங்களை வழங்கக்கோரி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விண்ணப்பித்தேன்.

மேலும், அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் நிலை குறித்த விவரங்களை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தேன். எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மாநில தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தேன். ஆனாலும், நான் கேட்ட தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை .

பொது மக்கள் நலன் கருதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட தகவல்களை தர மறுப்பது அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே எனது கோரிக்கை தொடர்பான விவரங்களை வழங்க மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிட வேண்டும்." என மனுவில் கூறியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஓடும் ரெயிலில் கர்ப்பிணியை கீழே தள்ளிய வழக்கு:
# குற்றவாளிக்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து கோர்ட் உத்தரவு



**திருப்பத்தூர், ஜூலை 15-**
ஓடும் ரெயிலில் கர்ப்பிணியை கீழே தள்ளிய வழக்கில் குற்றவாளிக்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த 4 மாத கர்ப்பிணியாக இருந்த இளம்பெண் ஒருவர் திருப்பூரில் இருந்து ஆந்திர மாநிலத்திற்கு செல்வதற்காக கோயம்புத்தூரில் இருந்து ஜோலார்பேட்டை வழியாக திருப்பதி வரை செல்லும் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயிலில் பொதுப்பெட்டியில் பயணம் செய்தார்.

ரெயில் வேலூர் மாவட்டம் குடியாத்தம்- ரெயில் நிலையங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்தபோது ரயிலில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் அவருக்கு பாலியல் தொந்தரவு அளித்தார். இதை எதிர்த்த அந்த பெண்ணை ஓடும் ரயிலில் இருந்து அந்த நபர் தள்ளிவிட்டார். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றார்.

இளம்பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு அவரை ரெயிலில் இருந்து கீழே தள்ளிய வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் அடுத்த பூஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்த ஹேமராஜ் (30 வயது) என்பவரை போலீசார் கைது செய்தனர். ஹேமராஜ் மீது 8 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை திருப்பத்தூர் மாவட்ட கோர்ட்டு விசாரித்து வருகிறது. இந்த நிலையில் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஹேமராஜ் குற்றவாளி என்று நீதிபதி மீனாகுமாரி தீர்ப்பளித்துள்ளார். மேலும் அவருக்கான தண்டனை விவரங்கள் வருகிற 14-ந்தேதி அறிவிக்கப்படும் என்று உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று இந்த வழக்கு நீதிபதி மீனாகுமாரி தலைமையில் விசாரணைக்கு வந்தது. கர்ப்பிணியை கீழே தள்ளிய வழக்கில் குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன், சிறை தண்டனையும் விதித்து மாவட்ட நீதிபதி மீனா தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் தமிழக அரசும், ரெயிலே துறையும் சேர்ந்து ரூ. 1 கோடி நிவாரணத்தை பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும் எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# குடராமெட்ரோவா ஜோடி சாம்பியன்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்றது. பெண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் ரஷியாவின் வெரோனிகா குடராமெட்ரோவா-பெல்ஜியத்தின் எலைஸ் மெர்டென்ஸ் ஜோடி, லாத்வியாவின் ஜெலினா ஆஸ்டபென்கோ-தைவானின் சு-வெய் ஜோடி உடன் மோதியது. இதில் சிறப்பாக ஆடிய குடராமெட்ரோவா ஜோடி 3-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

# சினிமா CINI செய்திகள்

## வெற்றிக் கொண்டாட்டத்தில் 'பறந்து போ படக்குழு'



இயக்குநர் ராமின் இயக்கத்தில், மிர்ச்சி சிவா நாயகனாக நடித்திருக்கும் 'பறந்து போ' திரைப்படம் கடந்த 4 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது. தற்போது 3வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'பறந்து போ' படத்தின் வெற்றியை படக்குழுவினர் பத்திரிக்கையாளர்களுடன் கொண்டாடினார். . அதேபோல், உலகெங்கிலும் 'பறந்து போ' திரைப்படத்தை வெளியீடு செய்த ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனத்தின் ராகுல் தனது அலுவலகத்தில் படக்குழுவினரை அழைத்து கேக் வெற்றி கொண்டாடினார். இக்கொண்டாட்டத்தில் இயக்குநர் ராம், நடிகர்கள் சிவா, கிரேஸ் ஆண்டனி மற்றும் மாஸ்டர் மிதுல் ரியான் ஆகியோருடன் ஜியோ ஹாட்ஸ்டாரின் பிரதீப் மில் ராய் பீட்டர், ஜிகேஎஸ் ப்ரோஸ் புரொடக்‌ஷன்ஸின் கருப்புச்சாமி மற்றும சங்கர், இசையமைப்பாளர் சந்தோஷ் தயாநிதி, எடிட்டர் மதி மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

## 'ஓஹோ எந்தன் பேபி' விமர்சனம்



நடிகரும் தயாரிப்பாளருமான விஷ்ணு விஷாலிடம் உதவி இயக்குநரான ருத்ரா கதை செல்கிறார். அவர் சொல்லும் இரண்டு கதைகளில் ஈர்க்கப்படாத விஷ்ணு விஷால், காதல் கதையை எதிர்பார்க்கிறார். இதனால், தனது சொந்த காதல் கதையை அவரிடம் விவரிக்கிறார். அந்த கதை விஷ்ணு விஷாலுக்கு பிடித்துப் போக, இரண்டாம் பாதியை சொல்லும்படி கேட்கிறார். காதலில் ஏற்பட்ட பிரச்சனையால் காதலியை பிரிந்த ருத்ரா, தன் காதல் கதைக்கு முடிவு இல்லாமல் தடுமாறுகிறார். பிரிந்த காதலர்கள் சேர்ந்தார்களா? இல்லையா? என்பது தெரிந்தால் மட்டுமே படம் பண்ணுவேன், என்று சொல்லும் விஷ்ணு விஷால், அதற்காக காதலியை மீண்டும் சந்திக்கும்படி ருத்ராவிடம் சொல்கிறார். பிரிந்துச் சென்ற காதலியை பல வருடங்களாக சந்திக்காத ருத்ரா, தன் பட வாய்ப்புக்காக மீண்டும் சந்தித்தாரா?, உடைந்த அவரது காதல் மீண்டும் ஒன்று சேர்ந்ததா என்பதற்கான விடையே ஓஹோ எந்தன் பேபி. நாயகனாக அறிமுகமாகியிருக்கும் நடிகர் விஷ்ணு விஷாலில் சகோதரர் ருத்ரா, பள்ளி, கல்லூரி, இளமைப் பருவம் என மூன்று காலக் கட்டங்களிலும் வயதுக்கு ஏற்ப கச்சிதமாக நடித்திருக்கிறார்.

நடிகராகவே வலம் வருகிறார் விஷ்ணு விஷால். நாயகி மிதிலா பால்கர் மற்றும் , இயக்குநர் மிஷ்கின், கருணாகரன் ஆகியோரது காட்சிகள் பாராட்டு பெருகிறது. ஜென் மார்டின் இசை அருமை. காதல் கதை என்றாலும், அதை ஒரு திரைப்படத்தின் பின்னணியில் சுவாரஸ்யமாக சொல்லியிருக்கும் இயக்குநர் கிருஷ்ணகுமார் ராம்குமார், தற்போதைய தலைமுறையினர் காதல் உணர்வுகளை எப்படி எடுத்துக் கொள்கிறார்கள், என்பதை ரசிக்கும்படி கொடுத்திருக்கிறார்.

## 'கைமேரா' இசை வெளியீட்டு விழா



மாணிக் ஜெய். என் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'கைமேரா'. இத்திரைப்படத்தில் அறிமுக நாயகனாக LNT எத்திஷ் நடிக்கிறார்.. மேலும், கிருஷ்ணன், ரஞ்சித் குமார், இயக்குனர் மாணிக் ஜெய் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.. கதையின் நாயகிகளாக சௌமியா, கிருஷ்ண நந்து, ஞானேஸ்வரி உள்ளிட்ட மூன்று பேர் நடித்திருக்கின்றனர்..

விக்னேஷ் ராஜா இசையமைத்துள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் படக்குழுவினருடன் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர்கள் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, மீரா கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டு இசைத்தட்டை வெளியிட்டனர்..

இந்த நிகழ்வில் மாணிக் ஜெய் பேசும்போது, இந்த படம் தமிழ் மற்றும் தெலுங்கு ஹிந்தி மொழிகளில் நேரடியாக எடுக்கப்பட்டது தான், சில நடிகர்கள் மட்டுமே பெங்களூரில் இருந்து இதில் நடித்திருக்கிறார்கள்'' என்று கூறினார். நாயகன் LNT எத்திஷ் பேசும்போது, ''இதில் என்னுடைய கதாபாத்திரம் எனக்குள் ஏதோ ஒன்றை கொடுத்தது. இந்த படம் நன்றாக வந்துள்ளது. சமீபத்தில் இங்கே வந்த சிவராஜ்குமார் சிறப்பாக தமிழில் பேசினார். நிச்சயமாக நான் அடுத்த பட விழாவில் தமிழில் பேசுவேன்'' என்று உறுதி அளித்தார்.

## 'மிசஸ் & மிஸ்டர்' திரை விமர்சனம்



வனிதா விஜயகுமாரும், ராபர்ட்டும் காதல் திருமணம் செய்து கொண்டு பாங்காக்கில் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். 40 வயதை எட்டும் வனிதா குழந்தை பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறார். ஆனால், ராபர்ட் குழந்தை வேண்டாம் என்று சொல்கிறார். இதனால் இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டாலும், கர்ப்பமாவதற்கான அனைத்து முயற்சிகளிலும் வனிதா ஈடுபட்டு வருகிறார். அதன்படி வனிதா கர்ப்பமாகி விட, ராபர்ட்டுக்கு தெரிந்தால் குழந்தை பெற்றுக்கொள்ள தடையாக இருப்பார், என்று நினைத்து அவருக்கு தெரியாமல் பாங்காக்கில் இருந்து இந்தியா வந்துவிடுகிறார். வனிதாவின் பிரிவை தாங்க முடியாமல் தவிக்கும் ராபர்ட், வனிதாவை தேடி இந்தியா வருகிறார். வனிதா ஆசைப்பட்டது போல் குழந்தை பெற்றுக் கொண்டாரா?, அவரது கணவர் ராபர்ட் குழந்தை வேண்டாம் என்று சொல்வதற்கான காரணம் என்ன ? என்பதே படத்தின் மீதிக்கதை. நாயகியாக நடித்திருக்கும் வனிதா விஜயகுமார், 40 வயது பெண்மணி கதாபாத்திரத்தில் கச்சிதமாக நடித்திருக்கிறார். நடன இயக்குநர் ராபர்ட், வனிதாவை காப்பாற்ற போராடும் காட்சிகளில் நேர்த்தியாக நடித்திருக்கிறார். வனிதாவின் அம்மாவாக நடித்திருக்கும் ஷகிலா, பவர் ஸ்டார் சீனிவாசன் ஆர்த்தி உள்ளிட்ட பலரும் படத்திற்கு எந்தவிதத்திலும் கைகொடுக்கவில்லை. ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் பாடல்கள் ஆட்டம் போட வைக்கிறது. மூத்த நடிகர்கள் பட்டாளத்தை வைத்துக்கொண்டு நகைச்சுவை கமர்ஷியல் படத்தை கொடுத்திருந்தாலும், அதை ரசிக்கும்படியாக கொடுக்க தவறியிருக்கிறார் மிசஸ் வனிதா.

## 'மாயக்கூத்து' திரை விமர்சனம்



எழுத்தாளர் நாகராஜன் கண்ணன், ஒரு கதை எழுதுகிறார். அதில் ஒரு தாதா, வீட்டு வேலை செய்யும் ஒரு ஏழை பெண், நீட் தேர்வுக்கு தயாராகும் ஒரு மாணவி, நடுத்தர குடும்ப பெண் என 4 கதாபாத்திரங்களை உருவாக்குகிறார். இந்த கதாபாத்திரங்களின் பின்னணி மற்றும் நியாயங்களை இவரது மனம் சொல்லும் யோசனைப்படி உருவாக்குகிறார். ஒரு நாள் இவர் கதையில் உருவாக்கிய நான்கு கதாபாத்திரங்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் தங்களுக்கு நியாயம் வேண்டும் என்று கேட்கிறார்கள். எங்கே சென்றாலும் எழுத்தாளர் நாகராஜனை பின் தொடர்கிறார்கள். இது உண்மையா இல்லையா என்று குழம்பும் நாகராஜன், தன் கதை மூலமாகவே இந்த சிக்கலுக்கு தீர்வு காண முயற்சிக்கிறார். அதன் பிறகு நடப்பவைகளை சுவாரஸ்யமான திரைக்கதையோடு சொல்வது தான் 'மாயக்கூத்து'. கதையின் நாயகனாக எழுத்தாளர் வாசன் என்ற கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் நாகராஜன் கண்ணன் ஒரு எழுத்தாளராக நடிப்பில் அசத்தியிருக்கிறார். டெல்லி கணேஷ் ரேகா குமனன், காயத்ரி, பேராசிரியர் மு.ராமசாமி, தீனா ஆகியோரின் நடிப்பு படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது. அஞ்சனா ராஜகோபாலன் இசை பாராட்டுகுரியது. கதையில் உள்ள கதாபாத்திரங்கள் நேரில் தோன்றினால் என்ன நடக்கும், என்ற வித்தியாசமான முயற்சியை நேர்த்தியாக கையாண்டிருக்கும் இயக்குநர் ஏ.ஆர்.ராகவேந்திரா படத்துடன் பார்வையாளர்களையும் பயணிக்க வைத்திருக்கிறார்.

## கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

**விருதுநகர், ஜூலை 15-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள்; கூட்டம் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தலைமையில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடி மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சர் தனிப் பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கலெக்டர் தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்கள். மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,800/- வீதம் மொத்தம் ரூ.1.38 இலட்சம் மதிப்பிலான திறன்பேசிகளை (Smart Phone) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், தனித்துணை ஆட்சியர் காளிமுத்து, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடந்தது



**ராமநாதபுரம், ஜூலை 15-**

ராமநாதபுரத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங்காலோன் தலைமையில் நடந்தது. ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 357 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த ஏப்ரல் 14-ந் தேதி காணொளிக் காட்சியின் வாயிலாக ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கருமல் கிராமத்தில் ரூ.86.00 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தினை திறந்து வைத்ததையொட்டி மாவட்ட கலெக்டர் சமுதாய கூடத்திற்கான சாவியை நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்வதற்காக கருமல் ஆதிதிராவிடர் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கினார். இதனை தொடர்ந்து வருவாய்த்துறையின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் கால்நடைகள் இறப்பு நிவாரண உதவித்தொகை ரூ.2லட்சத்து 46ஆயிரத்திற்கான காசோலையினை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் மணிமாறன், தாட்கோ மாவட்ட மேலாளர் விஜய பாஸ்கர், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**தேனி மாவட்டம் பெரியகுளம் நகராட்சி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆதரவற்ற நிலையில் இருந்தவர்களை முதியோர் காப்பகத்தில் பராமரித்திட மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கோவிந்தராவ், கலெக்டர் ரஞ்சீத் சிங் ஆகியோர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

### கள்ளிக்குடி தெற்கு ஒன்றியத்தில்

## தி.மு.க அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்



**திருமங்கலம், ஜூலை 15-**

மதுரை தெற்கு மாவட்டம்,கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் சித்தூரில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.க அரசின் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பா.மதன்குமார் தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.விமல், துணை அமைப்பாளர் ஆதவன்அதியமான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ம.ஆறுமுகம் வரவேற்று பேசினார். ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் கழக பேச்சாளர் கவிஞர் ஜீவா, இளம் பேச்சாளர் மா.ஜோஸ்பின் இலக்கிய ராணி ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்கள். மேலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பா.சுரேஷ், வி.ஜெகதீஸ், ஜெ.காளிதாஸ், ஜெகநாதன், ஏ.சாதிக் மொகைதீன், ராஜதுரை, வடக்கு ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஞானசேகரன், ஒன்றிய நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, அழகர்சக்திவேல், பால்பாண்டி, இராஜசுலோசனா, தேசிங்கு ராஜன், ஹரிஹரன், பாண்டி,வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன் மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள்,ஒன்றிய அணி அமைப்பாளர்கள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணியினர் செய்திருந்தனர்.

## நடிகர் சூர்யா சேதுபதிக்கு இயக்குநர் அனல் அரசு புகழாரம்



**ச**ண்டை இயக்குனர் அனல் அரசு இயக்கத்தில் சூர்யா விஜய் சேதுபதி நடிப்பில் கடந்த ஜூலை 4 அன்று திரையரங்குகளில் வெளியான பீனிக்ஸ் படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில் படத்தின் வெற்றியை கொண்டாடும் விதமாக பீனிக்ஸ் படத்தின் நன்றி தெரிவிக்கும் விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி தொடங்கும் முன்பு பத்திரிகையாளர் சங்கம், பீனிக்ஸ் படக்குழுவினரை கௌரவப் படுத்தினர். அப்போது சூர்யா விஜய் சேதுபதி பேசுகையில், "இந்த படத்தை மக்களிடம் கொண்டு சேர்த்ததற்கு நன்றி. இந்த படத்தை பார்த்து பலரும் பாராட்டினர். அனல் அரசு அவர்கள் என்னை தேர்வு செய்யவில்லை என்றால் இந்த இடத்தில் நான் இருந்திருக்க மாட்டேன். ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் மற்றும் சாம் சி.எஸ் பக்கபலமாக இருந்தனர். அனைவரும் நன்றி என்றார். இயக்குனர் அனல் அரசு பேசுகையில், இதை ஒரு சூர்யா விஜய் சேதுபதி படமாக பார்க்காமல், 28 இளைஞர்களின் வாழ்க்கையாக பாருங்கள். சூர்யா இந்த படத்தில் சிறப்பாக நடித்துள்ளார். அவருடைய கடின உழைப்பை கூடவே இருந்து பார்த்து உள்ளேன். இந்த வயதில் அதிக உழைப்பை கொடுத்துள்ளார். சூர்யாவுக்கு மிகப் பெரிய எதிர்காலம் உள்ளது. பத்திரிக்கையாளர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்றார்.

## வத்தலக்குண்டு: அருணாச்சலபுரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நேரில் ஆய்வு



**வத்தலக்குண்டு, ஜூலை 15-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பேரூராட்சி அருணாச்சலபுரத்தில், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் அமைக்கப்படும் அங்கன்வாடி கட்டிட பணிகளை திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் நேரில் ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின் போது உடன் திமுக நகர செயலாளர் சின்னதுரை, கவுன்சிலர் சின்னதுரை, சிபிஐ(எம்) ஒன்றிய செயலாளர் ஸ்டாலின் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



திருச்சி வரகனேரி பகுதியில் மாநகராட்சி சார்பில் ரூ.26.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிரான்சிஸ் படிப்பகத்தை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உடனிருந்தனர்.

# அரசியலில் அப்பா-மகன் உறவு மிக முக்கியம்

## துணை முதல்வர் உதயநிதி பேச்சு

திருச்சி, ஜூலை 15-

'அரசியலில் அப்பா-மகன் உறவு மிக மிக முக்கியம்' என தி.மு.க. நிர்வாகி இல்லத் திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி பேசுகையில் தெரிவித்தார்.

திருச்சி திருவெறும்பூர் முன்னாள் எம்.எல்.ஏ.,வும், தி.மு.க., தலைமை செயற் குழு உறுப்பினருமான கே.என்.சேகரன் இல்ல திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி மணமக்களை வாழ்த்தி பேசினார்.

அப்போது உதயநிதி பேசியதாவது: மணமகன் அப்பா சொல்கிற பேச்சையும் கேட்பதில்லை. அம்மா சொல்கிற பேச்சையும் கேட்பதில்லை. தாலி கட்டும் போது அவர்கள் அம்மா சொல்கிறார். நான் பக்கத்தில் தான் இருக்கிறேன். இரண்டு முடிச்சு தான் போட வேண்டும் என்று சொல்கிறார்கள்.

மணமகனும் காதில் கேட்காத மாதிரி மூன்று முடிச்சு போட்டு விட்டார். அப்புறம் தான் தெரிகிறது மணமகள் நீங்கள் தான் மூன்று முடிச்சு போட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். இப்பொழுதே அவர் நன்றாக மனைவி என்ன சொல்கிறாரோ, அதை தான் கேட்டுக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் ஒரே அடியாக மனைவி சொல்வதை மட்டும் கேட்டு நடக்காமல், அதே நேரத்தில் அப்பா அம்மாவுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நடக்க வேண்டும்.

அரசியலில் அப்பா-பையன் (மகன்) உறவு மிக மிக முக்கியம். அப்பா பேச்சை கேட்காத பையன் என்று சொல்லி விடக்கூடாது. அந்தப் பிரச்னை எனக்கும் இருக்கிறது. மணமகனுக்கும் இருக்கிறது.

இவ்வாறு உதயநிதி பேசினார்.

அரசியலில் அப்பா- மகன் உறவு மிக மிக முக்கியம் என்பதை உதயநிதி வெளிப்படையாக ஒப்புக்கொண்டது அரசியல் களத்தில் பேசும் பொருளாகி உள்ளது.

# புதிய செய்தி தொடர்பாளர்களாக...(1-ம் பக்க தொடர்ச்சி)

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை · வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை · நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை · சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை.

அரசு செய்தி தொடர்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகளின் செயலாளர்கள், துறை சார்ந்த அறிவிப்புகள் மற்றும் சாதனைகளின் தகவல்களை அரசு செய்தி தொடர்பாளர்களுக்கு வழங்குவார்கள். அச்செய்திகளின் உண்மைத்தன்மையை உறுதி செய்தபின் தலைமைச் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அரசு செய்தி தொடர்பாளர்கள் செய்தி ஊடகங்களை சந்தித்து தகவல்களை துல்லியமாகவும், சரியாகவும் வெளியிடுவார்கள்.

அரசின் திட்டங்கள் மற்றும் தகவல்களை வேகமாகவும், சரியான தகவல்களை உரிய நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்கவும் அரசு செய்தித் தொடர்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நாடு முழுவதும் அடுத்த மாதம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்: இந்திய தேர்தல் கமிஷன் திட்டம்

புதுடெல்லி, ஜூலை 15-

நாடு முழுவதும் அடுத்த மாதம் முதல் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை மேற்கொள்ள தேர்தல் கமிஷன் திட்டமிட்டு உள்ளது.

பீகாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. பீகாரை தொடர்ந்து அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் இந்த தீவிர சிறப்பு திருத்தம் மேற்கொள்ள தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதை எதிர்த்து பல்வேறு கட்சிகள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தன. இதை விசாரித்த நீதிபதிகள், குடியுரிமையை பரிசோதிக்க ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ரேஷன் அட்டை ஆகியவற்றையும் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என கருத்து தெரிவித்தனர். எனினும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம், அரசியல் சாசனப்படி கட்டாயம் எனக் கூறிய நீதிபதிகள் இந்த நடவடிக்கையை தொடர அனுமதி அளித்தினர். மேலும் இந்த வழக்கின் அடுத்த விசாரணையை வருகிற 28-ந் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இவ்வாறு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு சுப்ரீம் கோர்ட்டு அனுமதி அளித்துள்ள நிலையில், மேற்படி நடவடிக்கையை அடுத்த மாதம் (ஆகஸ்டு) முதல் நாடு முழுவதும் மேற்கொள்ள தேர்தல் கமிஷன் திட்டமிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. குறிப்பாக இந்த வழக்கின் அடுத்த விசாரணை 28-ந் தேதி நடைபெறும் நிலையில், அதன் மீது பிறப்பிக்கப்படும் உத்தரவை பொறுத்து இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என தேர்தல் கமிஷன் வட்டாரங்கள் தெரிவித்தன.



முருகப்பெருமானின் முதல் படை வீடான மதுரை, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 14 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று அதிகாலை கோலாகலமாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.



சேலம் நெடுஞ்சாலை நகர் அருகே உள்ள கிருஷ்ணா நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள சேலம் மாநகர் மாவட்ட அலுவலகத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார். இதில் அமைப்புச்செயலாளர் சிங்காரம், மாவட்ட செயலாளர் பாலு, ஜெயலலதி பேரவை துணைச்செயலாளர் பாலசுப்ரமணியன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர் செல்வராஜ், கொள்கை பரப்பு துணைச்செயலாளர் வெங்கடாஜலம், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச்செயலாளர் சக்திவேல், கலைப்பிரிவு செயலாளர் ரவிச்சந்திரன், துணைச்செயலாளர் சவுண்டப்பன் உடனிருந்தனர்.

# 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்று தனித்து ஆட்சி அமைக்கும்

## இ.பி.எஸ். மீண்டும் திட்டவட்டம்

சேலம், ஜூலை 15-

2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைக்கும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் கடந்த 7-ந்தேதி முதல் தொகுதிவாரியாக சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அதன்படி கோவை, விழுப்புரம், கடலூர், தஞ்சை, மயிலாடுதுறை, நாகை ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள 33 சட்டமன்ற தொகுதிகளில் மக்களை சந்தித்து அ.தி.மு.க.வுக்கு ஆதரவு திரட்டினார்.

இந்தநிலையில் எடப்பாடி பழனிசாமி 2-ம் கட்டமாக வருகிற 24-ந்தேதி முதல் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 8-ந்



தேதி வரை 7 மாவட்டங்களில் உள்ள 36 சட்டமன்ற தொகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செல்ல உள்ளார்.

இந்தநிலையில், சேலத்தில் அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

எனது சுற்றுப்பயணத்தில் மக்கள் மத்தியில் எழுச்சி இருப்பதை காண முடிகிறது. தி.மு.க. அரசுக்கு எதிரான மனநிலையில் தமிழக மக்கள் உள்ளனர். தேர்தலுக்கு 8 மாதங்கள் உள்ளன. அப்போது மேலும் சில கட்சிகள் அ.தி.மு.க. அணிக்கு வரும். உங்களுடன் ஸ்டாலின் என்ற பெயரில் முதல்வர் நாடகம் நடத்தி வருகிறார். .

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. தி.மு.க. வால் மக்களுக்கு நன்மை இல்லை. லாக்கப் மரணங்களை தடுக்க முடியவில்லை. உயிரிழந்தோர் குடும்பத்திற்கு இழப்பீடு தர மனமில்லை. மக்கள் விரோத ஆட்சி என்பதற்கு இதைவிட வேறென்ன சாட்சி? 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைக்கும். அ.தி.மு.க. கூட்டணி வலிமையாக, ஒற்றுமையாக உள்ளது. தேர்தல் நேரத்தில் பலம் பொருந்திய கூட்டணியாக அ.தி.மு.க. கூட்டணி அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பத்திரப்பதிவு அலுவலகத்தில் இன்று கூடுதல் டோக்கன்கள்

சென்னை, ஜூலை 15-

பத்திரப்பதிவு அலுவலகத்தில் இன்று கூடுதல் டோக்கன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுபமுகூர்த்த தினங்களில் பத்திரப்பதிவு அலுவலகங்களில் புதிய முன்பதிவுகள் அதிகம் நடைபெறும்.

இதை கவனத்தில் வைத்து, சுபமுகூர்த்த தினமான இன்றும், 16-ம் தேதியும் பத்திரப்பதிவு அலுவலகங்களில் கூடுதல் முன்பதிவு டோக்கன்களை அளிக்க பத்திரப்பதிவுத்துறை தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

ஒருசார்பதிவு அலுவலகத்தில் 100-க்கு பதில் 150, 2 சார்பதிவு அலுவலகங்களில் 200-க்கு பதில் 300 டோக்கன்களை அளிக்க உத்தரவிட்டுள்ளார்.

# ஏ.டி.எம். எந்திரங்களில் ரூ.500 வினியோகம் நிறுத்தம்?

## மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 15-

சட்டப்பூர்வமாக ரூ.500 நோட்டுகள் தொடர்ந்து செல்லுபடியாகும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் பண பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் நமது நாட்டில் ரூபாய் நோட்டுகளில் உச்ச மதிப்புடைய ரூ.500-ஐ புழக்கத்தில் இருந்து படிப்படியாக திரும்ப பெற ரிசர்வ் வங்கி முடிவு எடுத்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் ஒரு தகவல் பரவி வருகிறது.

அதில், "வருகிற செப்டம்பர் மாதம் 30-ந்தேதிக்கு பின்னர் வங்கிகள் தங்களது 75 சதவீத ஏ.டி.எம். எந்திரங்களில் ரூ.500 வினியோகிப்பதை நிறுத்தவேண்டும் என்று ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது. 2026-ம் ஆண்டு மார்ச் 31-ந்தேதி, ரூ.500 வினியோகிக்கப்படாத ஏ.டி.எம்.களின் எண்ணிக்கை 90 சதவீதம் ஆக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. ஏ.டி.எம். எந்திரங்களில் ரூ.200 மற்றும் ரூ.100 மட்டும் வினியோகிக்கப்பட இருக்கிறது. எனவே கையில் வைத்திருக்கும் ரூ.500 நோட்டுகளை இப்போது இருந்தே பணமாக்கிக்கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த தகவல் 'வாட்ஸ் அப்' உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இதனை மத்திய அரசு மறுத்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான பத்திரிகை தகவல் அலுவலக தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "இந்த தகவல் தவறாக பரப்பப்பட்டு வருகிறது.

ரிசர்வ் வங்கி இதுபோன்ற உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை. சட்டப்பூர்வமாக ரூ.500 நோட்டுகள் தொடர்ந்து செல்லுபடியாகும்" என்று கூறப்பட்டுள்ளது.



மதுரை மாநகர் மேற்கு 1-ம் பகுதி 83-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் வட்டச்செயலாளர் எம்.பால்பாண்டி தலைமையிலும், பகுதி செயலாளர் எஸ்.எம்.டி.ரவி முன்னிலையிலும் சோலைஅழகுபுரத்தில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பரவை ராஜா, திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், சுகந்தி அசோக், பைக்காரா கருப்பசாமி, பைக்காரா முத்துவேல், ஏ.தங்கப்பாண்டி, அஜய், சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.